Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

**புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்**

மலர் - 24 இதழ் - 2 பிப்ரவரி 2011

தனிப் பிரதி ரூ. 8/-



ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

# பதினான்காவது வேனிற்கால வேதாகம முகாம் மற்றும்
## திருமறை தியானம் நேயர்கள் & திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்கம்

**இடம் : YMCA வளாகம், ஏலகிரி மலை (வேலூர் மாவட்டம்)**

**நாள் : மே மாதம் 2,3,4 - 2011 (திங், செவ், புதன்)**

**சிறப்பம்சங்கள்**

- கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு,தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
- பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்
- கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
- வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்
- குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
- பெண்களுக்கு தனி இடவசதி.
- சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

**பதிவுக்கட்டணம் : பெரியவர்கள் ரூ. 125/- சிறியவர்கள் ரூ. 75/-**

**கிறிஸ்துவின் சபை, 288, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.**

Ph : 04257-230603 Cell : 98427-30382, 99655-30385

**குறிப்பு :** சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

## ஆசானின் போதனையில்....


1. நிறுவன ஆசிரியர் உரை ........................ 1
2. ஏன் நாங்கள் புதிய பிறப்புப் பற்றி பிரசங்கிக்கிறோம்? ........................ 5
3. பெண்கள் பகுதி ........................ 11
4. வாலிபர் பகுதி ........................ 14
5. சிறுவர் பகுதி ........................ 17
6. துருவின் சாட்சி ........................ 19
7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ......... 24
8. எங்கே நிம்மதி? ........................ 29


## BIBLE MEDITATION
**TV PROGRAM**

| | |
|---|---|
| TAMILAN TV - | Saturday 7.15 am. |
| IMAYAM TV - | Sunday 6.30 am. |
| TAMILAN TV - | Monday 7.00 am. |

**வாசகர்களின் அன்பான கவனத்திற்கு**

- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசத்தை கண்டிப்பாக எழுதவும்.

– ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 24 FEBRUARY - 2011 Issue - 2


நிறுவன ஆசிரியர் உரை

## முயற்சியின் சிகரம்

*E.Z. Selvanayagam*

ஒரு காலத்தில் தரம், ஒழுக்கம், நேர்மை ஆகிய நற்பண்புகளுக்கும் ரொம்ப மரியாதை கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், இப்பொழுது எப்படிக் குறுகிய காலத்தில் பணம் சம்பாதிப்பது, மார்க்கெட் பிடிப்பது என்பதில் மக்கள் அதிகக் குறியாக இருக்கிறார்கள். ஏதோ ஒரு சிலர் தான் தரம் ஒழுக்கம், நீதி, நேர்மை என்றெல்லாம் விடாப்பிடியாக இருக்கிறார்கள்.

இந்த மனோநிலை மார்க்கத்தையும் விட்டு வைக்கவில்லை. எதிலும் விளம்பர மோகம், பேர், புகழ், மனிதர்கள் பாராட்டினால் போதும் கடவுள் என்ன நினைக்கிறார் என்பது பற்றிக் கவலையில்லை என்கிற எண்ணம் வளர்ந்து பெருகி வருகிறதைப் பார்க்கிறோம். இந்த இழிநிலை வருந்தத்தக்கது; தீமை பயப்பது, வெறுக்கத்தக்கது. இதைக் குறித்துக் கிறிஸ்தவ மக்கள், சான்றோர்கள் அதிக ஆழமாகச் சிந்தித்து இவை வளராமல் தடுக்க முற்பட வேண்டும்.

நல்ல இயல்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி வேதாகமம் குறிப்பாகப் புதிய ஏற்பாடு, வாழ்க்கைக்குத் தேவையான மற்றெல்லா விஷயங்களுக்கும் ஆலோசனைகள் நல்கி அறிவுரை வழங்குவதைப் போலேவே இந்த விஷயத்துக்கும் நமக்கு வழிகாட்டுகிறது. நமக்கெல்லாம் நன்கு அறிமுகமாயிருக்கிற அப்போஸ்தலனுடைய வாழ்க்கையில் எவ்வாறு இந்த உன்னத மாண்பு இடம் பெற்றிருந்தது என்று கவனிப்போம்.

அவர்கள் யூத மார்க்கத்தில் இருந்த பொழுது என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும், யூத மார்க்கத்தில் தேறினவனாய் என் பிதாக்களுடைய பாரம்பரிய, நியாயங்

களுக்காக மிகவும் பக்தி வைராக்கியம் உள்ளவனாக இருந்தேன் (கலா 1:14) என்கிறார். பின்னர் கிறிஸ்து இயேசுவினால் பிடிக்கப்பட்டு அப்போஸ்தலனாக மாறின பிறகு அதே வைராக்கியத்தைக் கிறிஸ்துவின் பணியிலும் தொடர்ந்து காட்டி தனக்கு முன்பிருந்த அப்போஸ்தலர்களையெல்லாம் மிஞ்சி நிற்கிறார்.... அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய் பிரயாசப்பட்டேன். ஆகிலும் நான் அல்ல. என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது என்று அவருடைய ஊழியத்தின் பிரயாசைகளைப் பற்றியும் (I கொரி. 15:10) அவர்கள்மேல் வைத்த அன்பின் மிகுதியைப் பற்றியும் (II கொரி. 2:4) சபைகளுக்காக பாடுபட்டதைப் பற்றியும் (II கொரி. 11:23-28). அவருடைய எழுத்துக்கள் முயற்சியின் சிகரத்தைச் சுட்டுவதாகவே இருப்பதைக் கவனித்துப் பாருங்கள். இவைகளைச் சொல்லி அவர் பெருமை பட்டுக் கொள்ளாமல் நாமும் கூட செய்கின்ற ஒவ்வொரு காரியத்தையும் நம்மால் இயன்ற மட்டும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று உற்சாகமூட்டுவதற்காக எழுதுகிறார் என்று கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் இந்த முயற்சியின் சிகரம் என்னும் உன்னத நிலையை அடைவது பற்றி இன்னும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசுகிறார். உரோமாபுரியிலுள்ள திருச்சபை நம்பிக்கையில் பெருகவேண்டும் என்று ஜெபிக்கிறார் (ரோமர் 15:13) கொரிந்து பட்டணத்துத் திருச்சபைக்கு மற்ற விஷயங்களில் தேறியிருக்கிறது போல தர்ம காரியத்திலும் பெருக வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். (II கொரி 8:7) உங்கள் அன்பானது

**இயேசு கிறிஸ்து, தம்மைப் பின்பற்றுபவர்கள், மாந்தர்களிலேயே சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.**

அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிக மாய்ப் பெருகவும், சிறந்த பண்புகள் எல்லாவற்றைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருங்கள் என்று புத்திமதி கூறுகிறார் (பிலி. 1:9,4:8). கொலோசே பட்டணத்துத் திருச்சபை விசுவாசத்திலே உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுவீர்களாக என்கிறார் (கொலோ 2:7) மேலும், தெசலோனிக்கே திருச்சபைக்கு இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும், நற்காரியங்களில் தேறவேண்டும் என்றும், சகோதர அன்பில் பெருக வேண்டும் என்றும் புத்திமதி கூறுகிறார் (தெச. 4:1,10).

இப்படி ஏறக்குறைய தாம் அறிந்த மக்கள் யாவரும் முயற்சியின் சிகரத்தை எட்டவேண்டும் என்ற கருத்தை அப்போஸ் தலன் மட்டுமே வலியுறுத்துகிறார் என்று எண்ணி ஒதுக்கி விடக்கூடாது. கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து இந்த உன்னதநிலை அடைவதைப் பற்றி மௌனமாயிருக்கவில்லை. உங்கள் நீதி வேதபாரகர் பரிசேயர் நீதியைக் காட்டிலும் அதிகமாயிராவிட்டால் பரலோக இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்க முடியாது என்றும் ஆலோசனை கூறுகிறார். (மத். 5:20,48) ஆக இயேசு கிறிஸ்து, தம்மைப் பின்பற்றுபவர்கள், மாந்தர்களிலேயே சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்று

எதிர்பார்க்கிறார். அதைப் பின்பற்றி பவுல் அப்போஸ்தல னும் எதிர்பார்க்கிறார். அப்படியானால் நாம் அதை அசட்டை செய்யக்கூடாது.

இவ்வாறாக நாம் முயற்சியின் உச்சநிலையை அடைய வேண்டும் என்று செயல்படும் போது ஏற்படும் விளைவுகள் யாவை? நாம் செய்கின்ற பணியில் சில உடனடி மாற்றங்கள் தென்படும். நம்முடைய பணிகள் நேர்த்தியாகவும், சரியாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணுவோம். அன்றன்றுள்ள பணி களை அன்றன்று செய்து முடிக்க பிரயாசப்படுவோம். நாம் நம்முடைய காரியங்களை ஒழுங்காகவும், பாங்காகவும் செய்ய முற்படும்பொழுது தேவன் கூட மகிமைப்படுகிறார். ஆகையால், நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லா வற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் என்றும் வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தி னாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் என்றும்... எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக என்றும் வாசிக்கிறோம் (1கொரி. 10:31 கொலோ 3:17:1 பேதுரு 4:11).

நம்மால் அதிகமாகச் செய்ய முடிந்தும் குறைவாகச் செய்து விட்டு திருப்தியடைந்தவர்களாய்க் காணப்பட்டால், நாம் யாருக்காகப் பணி செய்கிறோமோ அவரை நாம் மதிக்கவில்லை அல்லது அவரில் அன்புகூரவில்லை என்று நம்மைக் கவனிக்கிற மக்க ளுக்கு தெரியாமற்போகாது. நாம் யாருக்காகப் பணிபுரிகி றோமோ அவரின் எண்ணங்கள், சிந்தனைகளை, கொள்கைளை நாம் உண்மையாகவே மதிக்கிறவர்களாயிருந்தால் நாம் நம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறப்பாகச் செய்ய முயற்சிப் போம்.

நாம் முயற்சியின் உச்சிக்கு ஏறிப்போக வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்படும்போது சில சங்கடமான உண்மைகள் நமக்குத் தெரியவரும். நாம் எவ்வளவு குறைவுள்ளவர்களாக இருக்கிறோம். தவறு செய்கிறவர்களாக இருக்கிறோம் என்பதும், நாம் நினைக்கிறபடி நாம் ஒன்றும் அவ்வளவு சிறந்தவர்களல்ல என்கிற உண்மையும் தெளிவாகத் தெரியவரும். இந்த இடத்தில் நம்மால் முடிந்த அளவு, என்பது பரிபூரணத்தைக் குறிக்காது என்பதை நினைவில் கொள்க; எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறப்பாக என்றே பொருள்படும். ஒருவேளை நம்மால் முடிந்த அளவு சிறந்தது என்பது பரிபூரணத்தை விட மிக மிகக் குறை வாகக் கூட இருக்கலாம். ஆனால், அது ஆண்டவருக்குப் பிரிய மானது. நம்மால் இயன்றதை வஞ்சகம் இல்லாமல் செய்து விட்டோம். அதுதான் தேவன் விரும்புவது. ஏழை விதவை போட்ட காணிக்கையை இயேசு பாராட்டினதை நினைவில் கொள் ளுங்கள். இரண்டு பைசா என்பது செல்வந்தர்கள் போட்ட காணிக் கைகளை விட அதிகம் என்பதனால் அல்ல; தனக்கு இருக்கிற எல்லாவற்றையும் கொடுத்துவிட்டாள் என்பதே பாராட்டப்படுவது (மாற்கு 12:42-44).

ஒரு காரியத்தை நினைவில் வையுங்கள், உங்கள் முயற்சியின் சிகரத்தை எட்ட நீங்கள் பாடுபடும் பொழுது உங்கள் திறமையின் தரம் நாளுக்குநாள் பட்டை தீட்டப்பட்ட வைரம் போல் பிரகாசம் அடைகிறது. உங்கள் ஆர்வம் புதிய புதிய எண்ணங்களைத் தோற்றுவித்து புதிய புதிய கோணங்களில் காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

இப்படி நீங்கள் முயற்சியின் உச்சியை அடையப் பாடுபடுகிற போது சில எதிர்மறை விளைவுகளும் உண்டாகலாம். மேலும், மேலும் நீங்கள் உற்சாகமடையும்போது ஏற்படுகிற வேலைப்பளு அந்தவிதமான சிந்தை இல்லாத உங்கள் உடன் வேலையாட்களுக்கு தொய்வைக் கொடுக்கலாம். அவர்கள் தாங்கள் அடைந்த சாதனை போதும் என்று மெத்தனமாக இருப்பார்கள். அதனால் சில வேளைகளில் கருத்து வேறுபாடுகள் தோன்றி மெல்ல வாக்குவாதத்துக்கும், சச்சரவுக்கும் கூட இழுத்துச் சென்று விடும். பிரிந்து செயல்பட வேண்டிய சூழ்நிலைகள் கூட உருவாகலாம் (அப். 14:39-39). அப்படிப்பட்ட வேளைகளில் நீங்கள் சோர்ந்து போய் போதிய ஆதரவு இல்லையே என்று அவர்களுடைய இழுப்புக்கு உடன்பட்டு உங்கள் முயற்சியைத் தளர விட்டு விடாதீர்கள். பொறுமையாய் இருங்கள்; தைரியம் இழக்காமல் தனிமையாகவே செயல்படுங்கள். மற்றவர்களுக்கு முன் மாதிரியாகச் செயல்படுங்கள். வேதாகமத்தை எடுத்து குணக்குன்றுகளாகத் திகழ்ந்த சான்றோர்கள் விசுவாசிகள் ஆகியவர்களைப் பற்றி எடுத்துச் சொல்லுங்கள். ஒருவேளை அது உடனடியாகப் பலன் தராமல் போகலாம். சிறுகச் சிறுக அது மற்றவர்களையும் ஆட்கொள்ளும் என்பதில் சந்தேகம் வேண்டாம்.

---

**உங்கள் முயற்சியின் சிகரத்தை எட்ட நீங்கள் பாடுபடும் பொழுது, உங்கள் திறமையின் தரம் நாளுக்குநாள் பட்டை தீட்டப்பட்ட வைரம் போல் பிரகாசம் அடைகிறது.**

---

சபையில் செய்யப்பட வேண்டிய பணிகள் அனைத்துமே விருப்பப்பட்டு செய்யப்படும் தன்னார்வப் பணிகளே. சில பேர் இப்படி அப்படி போக்குக் காட்டி விட்டு ஓட்டம் பிடிப்பார்கள். இந்தப் பணிகளுக்கு கண்காணிகளும் மேஸ்திரிகளும், கிடையா. குறைவாகச் செய்கிறவர்களுக்கோ மோசமாகச் செய்கிறவர்களுக்கோ தண்டனை ஏதும் கொடுப்பாரில்லை. சம்பளப் பிடித்தமும் கிடையாது. ஆனால், தேவன் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் யாருக்கு எத்தனை தாலந்துகள் கொடுத்தோம் என்பதை மறந்து விடமாட்டார்.

ஆகவே சகோதரர்களே! தாய்குலமே! மனுஷர் பார்க்க வேண்டும் என்று பார்வைக்கு ஊழியம் செய்யாமலும், கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்படுவான் என்பன போன்ற அறிவுரைகளையும் எச்சரிப்புகளையும் மனதில் கொண்டு உங்களால் முடிந்த அளவு நம்முடைய வாழ்க்கையில் நற்பண்புகளைப் பெருக்கி தேவனுக்குப் பிரியமாய் நடக்க முயலுவோமாக! ✪

நமது, "திருமறை ஆசான்" மாத இதழின் நிறுவன ஆசிரியர், பெருமதிப்பிற்குரிய **சகோ. E.Z. செல்வநாயகம் ஐயா** அவர்கள் கர்த்தருக்குள் மரித்து, 09.02.2011-ல் 18 ஆண்டுகள் நிறைவடைவதால், அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது. ஆசிரியர்.

# ஏன் நாங்கள் புதிய பிறப்பு பற்றி பிரசங்கிக்கிறோம்?

*J.C. Choate*

புதிய பிறப்பு என்றால் என்ன? இது ஒரு நல்ல கேள்வி. உண்மையில் இந்தக் கேள்வி அநேக முறை கேட்கப்பட்டு இதற்குப் பல்வேறு பதில்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், அநேக ஜனங்கள் இது என்ன என்பதை அறியாமல் இருந்து வருகிறார்கள்.

நம்முடைய பிரிவினைச் சபை நண்பர்கள் புதிய பிறப்பு என்பது, ஒருவர் இயேசு கிறிஸ்துவை தன்னுடைய ஜீவியத்தில் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது ஏற்படுகின்ற ஓர் அற்புத மாற்றம் தான் என்று விளக்கம் கொடுப்பார்கள். ஆனால், புதிய பிறப்புக்கு மேற்சொல்லப்பட்ட விளக்கத்தை விட அதிகமான பொருள் உண்டு.

யோவான் மூன்றாம் அதிகாரத்திற்கு நாம் திரும்பும் போது அங்கே கிறிஸ்து புதிய பிறப்பு அல்லது ஒருவர் மறுபடியும் பிறத்தல் பற்றி பேசுகிறதை நாம் பார்க்கிறோம். இது கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்பு போதிக்கப்பட்டது. அப்போது, பழைய பிரமாணம் ஒரு சட்டமாக இருந்து கட்டுப்படுத்தியது என்பதை மனதில் வையுங்கள். ஆயினும், கிறிஸ்துவின் பிரமாணம் அல்லது கிறிஸ்தவம் வரும் போது என்ன அவசியப்படும் என்கிற எதிர்பார்ப்புடன் இது போதிக்கப்பட்டிருந்தது. இது ராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு போதிக்கப்பட்டிருந்தது. ஆனால், ராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, ஒருவர் அதில் பிரவேசிக்க வேண்டுமென்றால் மறுபடியும் பிறப்பது அவசியமாயிருக்கும் என்று கர்த்தர் சொன்னார்.

ஆனால், நாம் இப்போது புதிய பிறப்பு பற்றி வாசிப்போம். "*யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்திலே இயேசு*வினிடத்தில் வந்து; ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக; ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு; ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்

கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும் ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், அதிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். அதற்கு நிக்கொதேமு: இவைகள் எப்படி ஆகும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? மெய்யாகவே, மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிற வருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" (யோவான் 3:1-13).

இப்பொழுது நாம் வாசித்த வசனங்களின் அமைப்பைக் கவனியுங்கள். நிக்கொதேமு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்தான். அவன் ஒரு பரிசேய னாகவும், யூதர்களுக்கு அதிகாரியாகவும் இருந்தபடியால் தன் வருகை இரகசியமாய் இருக்க வேண்டும் என்பதற்காக இராத்திரியில் வந்தான் என சிலர் நினைக்கின்றனர். இந்த பரிசேயர்கள் யூதர்களில் மிகவும் பக்தியுள்ள ஒரு பிரிவினர். அவர்கள் உயிர்த்தெழுதலையும், தேவதூதர்களையும் விசுவாசித்தனர். இந்த நிக்கொதேமு யூதர்களுக்கு அதிகாரியாக இருந்தபடியால் இவர் வயதில் மூத்தவராகவும், பதவியும், மரியாதையும் பெற்ற ஒருவராகவும் வாழ்ந்திருக்கிறார் என பொருள்படுகிறது. எப்படியோ, இவன் இயேசுவினிடத்தில் வரும் போது தன்னை இயேசுவின் விசுவாசி என அடையாளப்படுத்துகிறான். இயேசுவை ரபீ அல்லது போதகர் என்று அழைப்பதன் மூலம், கிறிஸ்து அற்புத அடையாளங்களைச் செய்ய வல்லவராயிருந்தபடியால், அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை இந்த மனிதன் ஒத்துக் கொண்டான். இப்படிப்பட்டதான ஒரு சூழ்நிலையில் ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தைக் காண வேண்டுமென்றால் மறுபடியும்

பிறக்க வேண்டும் என்று இயேசு விளக்கத் தொடங்கினார். ஆனால், இயேசு என்னப் பேசினார் என்பதை புரிந்து கொள்ள முடியாததால் அவன் குழப்பமடைந்தான். அதன் பின்பு, ஒருவன் முதிர்வயதான பிறகு எப்படி மறுபடியும் பிறக்க முடியும் என அறிய விரும்பினான். நிக்கொதெமு தொடர்ந்து கேட்கும் போது, ஒருவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்று கேட்டான். நிச்சயமாக அப்படி ஒருவனாலும் செய்ய முடியாது; இயேசுவும் அப்படிப் போதிக்கவில்லை. கிறிஸ்து ஆவிக்குரிய பிறப்புப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால், நிக்கொதேமு சரீரப்பிரகாரமான பிறப்பைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தான். ஏனென்றால், அவனுக்கு தெரிந்த ஒரே பிறப்பு இதுதான்.

***கர்த்தருடைய வார்த்தைகளில் உங்களுக்குப் பரிச்சயம் இருந்தால், தண்ணீரை சம்பந்தப்படுத்துகிற அந்தக் கட்டளை அல்லது செயல் ஞானஸ்நானம் தான் என்பது விளங்கும்.***

தொடர்ந்து, இயேசு புதிய பிறப்பு பற்றி மிக விவரமாக விளக்கினார். இயேசு அநேக வார்த்தைகளைக் கொண்டு ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்றால் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறப்பது அவசியம் என்று சொன்னார்; இதைத்தவிர அதில் பிரவேசிக்க வேறு வழியில்லை. இங்கே நாம் இந்த வார்த்தைகளை மேலுமாக ஆராய்ந்து பார்ப்போம். முதலாவது, ஜலத்தினால் பிறப்பது அவசியம் என்று இயேசு சொன்னதை கவனியுங்கள். பிறப்பு என்பது ஒரு புதிய வாழ்க்கை சம்பந்தப்பட்டது. ஆனால், இங்கே சொல்லப்பட்டிருக்கிற ஜலத்தைப் பற்றி என்ன? இதற்கும் சரீரப்பிரகாரமான பிறப்புக்கும் எந்த சம்பந்த மும் இல்லை. ஏனென்றால், இயேசு நிக்கொதேமுவிடம் இந்த பிறப்பு, மறுபடியும் பிறப்பதற்கு ஒருவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசிப்பதிலிருந்து வேறுபட்டது என்று விளக்கிவிட்டார். "*தண்ணீர்*" என்கிற வார்த்தையை நாம் சிந்திக்கும் போது இந்த வார்த்தை எங்கெல்லாம் பயன்படுத்தப் பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் அது ஆவிக்குரிய தண்ணீராகப் பயன்படுத்தப்பட்டால் அது ஜீவத் தண்ணீராகத்தான் இருக்க முடியும். மாறாக, ஜலம் என்று வித்தியாசமான வசனங்களில் வெறுமனே காணப்பட்டால் அது நாம் பயன்படுத்தும் சொல் அர்த்த ரீதியிலான தண்ணீராகத்தான் பொருள்படும். ஆனால், இந்த சந்தர்ப்பத்தில் அது எவ்விதமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது? இங்கே ஜலம் என்று மட்டும் இருப்பதால், இயேசு சாதாரண தண்ணீரைப் பற்றிதான் பேசுகிறார் என்கிற முடிவுக்கு வரவேண்டும். இப்போது, அடுத்த கேள்வி; தண்ணீரோடு இணைக்கப்பட்டிருக்கிற எந்த கட்டளையை நாம் வேத வாக்கியங்களில் வாசிக்கிறோம்? கர்த்தருடைய வார்த்தைகளில் உங்களுக்குப் பரிச்சயம் இருந்தால், தண்ணீரை சம்பந்தப்படுத்துகிற

அந்தக் கட்டளை அல்லது செயல் ஞானஸ்நானம் தான் என்பது விளங்கும். அப்போஸ்தலர் 8:26-39 வசனங்களில், அந்த எத்தி யோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவானவர் போதிக்கப்பட்டு, பின்பு ஞானஸ் நானம் பெறும்படி தண்ணீருக்குள் அழைத்துச் செல்லப் பட்டான். மேலுமாக, ஒருவன் ஜலத்தினால் பிறக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார். ஒருவன் ஜலத்தினால் எப்படிப் பிறக்க முடியும்? இங்கே தண்ணீரானது ஞானஸ்நானத்தை குறிக்கிறதாக இருந்தால் ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் அடக்கம் பண்ணப் படுதல் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் (கொலோசெயர் 2:12), தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டால், ஒருவர் தண்ணீரிலிருந்து வெளியே வரும் போது, அங்கே ஒரு மறுபிறப்பின் அனுபவம் ஏற்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் ஞானஸ்நானத்தில் இது தான் சம்பவிக்கிறது என்று விளக்கு கிறார் (ரோமர் 6:3,4).

---

***ஒருவர் தண்ணீரிலிருந்து வெளியே வரும் போது, ஒரு மறுபிறப்பின் அனுபவம் ஏற்படுகிறது.***

---

ஜலத்தினால் பிறப்பது அல்லது ஞானஸ்நானம் பெறுவது என்பதை நாம் தொடர்ந்து சிந்திக்கும் போது, ஒருவர் மறுபடியும் பிறக்கும் போது புதிய ஜீவனுக்கான அனுபவம் ஏற்படுகிறதென்று நாம் நினைப்பூட்டப்படுகிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 6:3-லும், கலாத்தியர் 3:26,27 வசனங்களிலும் சொல்லும் போது, ஞானஸ்நானம் ஒருவரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது என்கிறார். மேலும், கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் புது சிருஷ்டிகளாயிருக்கிறார்கள் என்று அப்போஸ்தலன் பவுல், "*இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ் டியாயிருக்கிறார்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின* " (I கொரிந்தியர் 5:17) என்கிறார். *பேதுரு கிறிஸ்தவர் களிடம் பேசும் போது, " நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்* " (Iபேதுரு 2:3) என்கிறார்.

இரண்டாவது, ஒருவர் ஆவியினாலும் பிறக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார். இங்கே ஆவி என்பது யாரைக் குறிக் கிறது? எபேசியர் 4:4-ல் பவுல் ஒரே ஆவி நமக்கு உண்டு என்று சொல்லியிருக்கிறார். அது என்ன ஆவியாயிருக்கும்? இது பரிசுத்த ஆவிதான் (யோவான் 14:26; அப்போஸ்தலர் 1:8; அப். 2:38; (I தெசலோனிக்கேயர் 4:8). ஆனால், பரிசுத்த ஆவியானவரின் பணி என்னவாயிருந்தது? அவர் அப்போஸ்தலர்களையும், மற்ற வர்களையும் கர்த்தருடைய வார்த்தையை எழுதும்படி வழிநடத்தி னார். அதற்கு முன்பாக, பழைய ஏற்பாட்டு தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் தேவனுடைய வார்த்தையை எழுத அவர்களை வழி

நடத்தினார் (II பேதுரு 1:21). "*வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது* " என்று பவுல் எழுதினார். (II தீமோத்தேயு 3:16,17). ஆனால், ஆவியின் வார்த்தை அல்லது கர்த்தருடைய வார்த்தையில் என்ன வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது? சத்தியம் (யோவான் 17:17), கிறிஸ்துவின் சுவிசேஷம் (ரோமர் 1:16) அல்லது ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்பது (அப். 2:37,38). ஒருவர் ஆவி யின் வார்த்தையை கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்கென்று தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறும் போது, கர்த்தர் அவனை இரட்சித்து தம்முடைய ராஜ்யம் அல்லது சபையிலே சேர்த்துக் கொள்வார் என்பதே. அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத் தை வாசியுங்கள். அங்கே இதைத் தான் எருசலேமில் இருந்த ஜனங்கள் செய்ததை நீங்கள் காண முடியும். அங்கே ஜனங்கள் மறுபடியும் பிறந்தார்கள் என்கின்ற அதே துல்லியமான வார்த்தை கள் இல்லாவிட்டாலும், ஒருவர் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்கும் போது தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும் என்று கிறிஸ்து சொன்னபடியாக அவர்கள் மறுபடியும் பிறந்திருக் கிறார்கள் என்பதை நாம் அறிவோம். அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் ஜனங்கள் சுவிசேஷத்தை கேள்விப்பட்டபோது, அதை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திருந்தி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்ற போது கர்த்தர் அவர்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொண்டார். ஆனால், ராஜ்ஜியமும், சபையும் எப்படி? இரண்டும் வெவ்வேறு அமைப்புகளா? வேத வாக்கியங்களில் ராஜ்யம், சபை இவ்விரண்டும் ஒரே அமைப்பாக அடையாளப் படுத்துகிறபடியால் அவைகள் வெவ் வேறு அமைப்புகள் அல்ல.

உதாரணத்திற்கு, பவுல் கொலேசே சபைக்கு எழுதும் போது அங்கே சபை அங்கத்தினர்கள் இருளின் அதிகாரத்தினின்று விடுத லையாக்கப்பட்டு அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்ப டுத்தப்பட்டதாகக் கூறுகிறார் (கொலோசெயர் 1:13). அப்போஸ் தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில், ஜனங்கள் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்ற போது இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டார்கள்; ஆனால் அப்போஸ்தலருடைய நடபடிகள் எட்டாம் அதிகாரத்தில் தேவனுடைய ராஜ்யத்துக்கேற் றவைகளைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவா சித்தபோது புருஷரும், ஸ்திரீகரும் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்போஸ்தலர் 8:12). இது அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் ஜனங்கள் சபையில் அங்கத்தினரானார்கள் என்றும், சமாரியர்கள் ராஜ்யத்தில் அங்கத்தினரானார்கள் என்றும் பொருள் படுமா? இவ்விரண்டும் வேறுபட்ட அமைப்புகளா? இல்லை, அவைகள் இரண்டும் ஒரே அமைப்பு அல்லது ஸ்தாபனமாக உள்ளது.

எனவே, ஒருவர் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறப்பதென்பது ஒருவர் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அதை விசுவாசித்து, தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவின் பேரிலுள்ள தன் விசுவாசத்தை அறிக்கையிட்டு, இரட்சிக்கப்படும்படி தண்ணீரில் ஞானஸ்நானம் பெறும்போது, கர்த்தர் தம்முடைய சபையில் அவரை சேர்த்துக் கொள்கிறார் அதாவது அந்த நபர் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார் என்பதே. கர்த்தருடைய குடும்பத்தின் அங்கத்தினராக, ஒரு புது சிருஷ்டியாக, ஒரு புதிய கிறிஸ்தவனாக அவன் வளர்ந்து, விருத்தியடைந்து முழுமையான வளர்ச்சி அடைந்த கிறிஸ்தவனாகும்படி விசுவாசத்தில் உறுதியாக வேண்டும். இதை நாம் செய்து, பிறகு ஒவ்வொருவருக்கும் பிரசங்கிக்க வேண்டும். முழு உலகத்திற்கும் பிரசங்கிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் நாம் கர்த்தரைப் பிரியப்படுத்த முடியும். அப்போது தான் நமக்கு நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை உண்டாகும்.

நீங்கள் மறுபடியும் பிறந்து விட்டீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? இல்லையென்றால் நீங்கள் இழந்துபோன நிலையில் இருக்கிறீர்கள், இதைச் செய்யும் வரை இழந்த நிலையில் தான் இருப்பீர்கள். நீங்கள் இந்த உலகத்தில் இரட்சிக்கப்படுவதற்கு, வருகின்ற உலகத்தில் இரட்சிக்கப்படுவதற்கு மறுபடியும் பிறப்பதைத் தவிர வேறு வழி இல்லை. இந்தக் காரியங்களில் தேவனுடைய சித்தம் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொள்ளும் வரை தொடர்ந்து படிக்கும்படியாய் நாங்கள் ஜெபிக்கிறோம். இவைகளைப் புரிந்து அவர் போதித்திருக்கிறபடியே செய்ய வேண்டுமென்றும் ஜெபிக்கிறோம். ✪

## விசுவாசிகள் அறிந்து கொள்ள வேண்டிய ஏழு காரியங்கள்

1. ஒரு நாளிலே நாம் கிறிஸ்துவைப் போலிருப்போம் (1 கொரிந்தியர் 3:2)
2. கிறிஸ்து நம் பாவங்கள் எல்லாவற்றையும் எடுத்துப்போட்டார் (1 யோவான் 3:5)
3. நாம் சகோதரரிடத்தில் அன்பு கூறுகிறபடியால் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம் (1 யோவான் 3:14)
4. தேவன் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம் (1 யோவான் 3:24)
5. நமக்கு நித்திய ஜீவன் உண்டு (1 யோவான் 5:13)
6. நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவி கொடுக்கிறார் (1 யோவான் 5:15)
7. தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம் (1 யோவான் 5:18)

பெண்கள் பகுதி

# வீழ்ச்சியிலும் மாறாத தேவனுடைய திட்டம்

**ரேச்சல் இராஜநாயகம்**

**சி**ருஷ்டிப்பு முதற்கொண்டே, ஆண் தன் குடும்பத்திற்குத் தலைவனாக இருக்க வேண்டுமென்பதில் தேவன் மிகவும் திட்டமாயிருந்தார். இருந்த போதிலும் பெண்ணினால் உண்டான மீறுதலினிமித்தம், புதிய நிபந்தனைகளும், சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டது.

விலக்கப்பட்ட கனியை ஏவாளும், ஆதாமும் புசித்த பிறகு, பாவம் செய்து விட்டதாக உணர்ந்தார்கள். முதல் முறையாக தேவனைக் கண்டு பயந்தார்கள். பகலில் குளர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கெண்டார்கள். அப்பொழுது அவன்; நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளிந்துக் கொண்டேன் என்றான். நீ நீர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார்.

அதற்கு ஆதாம்; என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள். நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி; நீ இப்படிச் செய்தது என்ன என்றார். (ஆதி. 3:8-13) இந்த துக்கமான சோதனை நிகழ்ச்சியில், ஏவாள் தன் குடும்பத்திற்கான தலைமையை, தான் எடுத்துக் கொண்டாள். அவள் அவ்வாறு செய்வதற்கு ஆதாம் அனுமதித்து விட்டான். ஆனால், தேவன் அந்த இடத்திற்கு வந்தபோது, அவர்கள் ஏற்படுத்திய அந்த தலைமை மாற்றத்திற்கு உடன்பட்டாரா? இல்லை. தேவன் ஆதாமைக் கூப்பிட்டார். பாவம் நிகழ்ந்தது பற்றி தேவனுக்குத் தெரியுமா? மேலும் யார் இந்த மீறுதல் செயலைச் செய்ய வழிகாட்டியது என்பதும் தேவனுக்குத் தெரியு மா? தேவன் எல்லாவற்றையும் அறிந்தே இருந்தார். ஆனால், ஆதாமை குடும்பத்தின் தலைவனாக அதின் நேர்த்தி யான தலைமைப் பொறுப்புடன் உண்டாக்கியிருந்தபடியால், நடந்த காரியத்திற்கு பதில் அளிக்கும்படி தேவன் அவனையே அழைத்தார்.

இச்சம்பவத்திலிருந்து, நாம் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்வது அவசியமாகிறது. மனிதன் தன்னுடைய பங்கிலே காரியங்களை எப்படிச் செய்தாலும், தேவன் தாம் ஏற்படுத்திய ஒரு திட்டத்தைத் தானே மாற்றியதில்லை, மாற்றவுமாட்டார்.

அவர்கள் செய்த பாவத்தின் விளைவாக, புதிய கட்டளைகளும், தண்டனைகளும் சர்ப்பத்திடமும், குறிப்பாக பெண்ணிடமும், ஆதாமிடமும் பேசப்பட்டது. விசேஷமாக, பெண்ணிடம் பேசப் பட்டதை நாம் அறிய ஆவலாயிருப்போம். அதென்னவென்றால் அவர் ஸ்திரீயை நோக்கி; நீ கர்ப்பவதியாயிருக்கும் போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் என்றார் (ஆதி. 3:16).

பாவத்தின் விளைவாக துக்கமும், வேதனையும் இந்த உலகில் கொண்டு வரப்பட்டது. மானிட இனத்தில் சரிபாதியாக பெண் என்பவள் அதிக உணர்ச்சி உள்ளவளாகவும், மனவெழுச் சியுள்ளவளாகவும் இருப்பதால் இந்த சம்பவத்தில் அதிக சுமை யை ஏற்க வேண்டியதாயிற்று. அவளுடைய கர்ப்பத்தின் வேத னை அதிகரிக்கப்பட்டது. பிள்ளை பெறும்போது, வேதனையை உண்டாக்கிவிட்டார். அத்தோடு மட்டுமல்லாமல், தன் கணவனு டைய அதிகாரத்திற்கு உட்படவும் தள்ளப்படுகிறாள். அவள் ஆசை அவள் புருஷனைப் பற்றியிருக்கும். அவன் அவளை ஆண்டு கொள்ளுவான்.

மேலும், ஒரு கிறிஸ்தவ கணவனுக்கும், மனைவிக்கும் வேண்டிய ஆலோசனைகளை 1பேதுரு 3:1-7 வசனங்களில் வாசிக்கிறோம். அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயத்தோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்தி அவள் கொள்ளப்படுவார்கள். மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்த மும், அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாமயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீ களும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்ட வன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.

அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானாபடியினால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.

தேவனுடைய அதிகாரம் நிறைந்த கட்டளைகள் பற்றியும், குடும்பத்திற்கு தலையாக தேவன் புருஷரை ஏற்படுத்தியது பற்றியும், முழுக்குடும்பத்திற்கும வழிகாட்டியாக ஆண் இருப்பது பற்றியும் இந்த வசனங்கள் நமக்கு விளக்கமாகச் சொல்லுகிறது. கிறிஸ்தவப் பெண்கள் தங்கள் கணவனுக்கு அடங்கியிருக்க வேண்டுமென்று கட்டளையாகக் கூறப்படுகிறது. புருஷர்கள் தங்கள் மனைவிகளை அன்போடும், புரிந்து கொள்ளுதலோடும் நடத்திச் செல்ல வேண்டும். ஆனால், ஒருவேளை மனைவி தன் கணவனை விட அதிக புத்திசாலியாக இருந்தால் அல்லது அவனை விட சிறந்த வழிநடத்தும் தகுதிபடைத்தவளாய் இருந் தால் அவள் தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்ளலாமா? இல்லை. தேவன் தாமே ஏற்படுத்திய அந்த ஒழுங்குக்கு மாறாகச் செயல்பட எந்த ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை.

தேவன் விதித்திருக்கிற, இந்த அதிகாரமுள்ள கட்டளையை உணர்ந்து ஆண்களும், பெண்களும் தங்களுடைய துணையை தேர்ந்தெடுப்பதில் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். ஒரு சாமர்த்தியமான பெண், பலவீனமான ஆணைத் திருமணம் செய்ய நேரிடும் போது அவளுடைய பொறுப்பெல்லாம், ஓர் உதவிக்காரியாய், ஏற்ற துணையாய் அவன் தலைமையேற்றுச் செல்லும் விதத்தில் அவனுக்கு தைரிய மூட்டுபவளாக இருக்க வேண்டுமேயொழிய, அவனுக்கு மேலாக அதிகாரம் செலுத்தி அவனை இன்னும் பலவீனப்படுத்திவிடக் கூடாது.

இந்த வசனங்களில் காணும் அதிகாரங்கள் வெறுமனே கணவனும் மனைவியும் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் மட்டு மல்ல. கீழ்வரும் சில காரியங்களையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

ஒரு பெண்ணின் சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியும், தேவனுடைய பார்வையிலே மிகவும் விலையேறப் பெற்றதாயி ருக்கிறது.

கணவன், மனைவி ஆகிய இருவரின் உறவுகள், தங்கள் நியாயத்தின்படியும், கருத்தின்படியும் மாத்திரம் தங்களுக்குள் இருந்துவிடக்கூடாது. மாறாக, அவர்கள் இருவருக்குள்ளும் இருக்கும் உறவு, தேவனுக்குக் கீழ்ப்படிதல் மூலமாக, அவர்களுக் குள் இருக்க வேண்டும்.

எந்த ஒரு காரியத்திலும், தேவன் நமக்குக் கொடுத்திருப்ப வைகளைத் தள்ளிவிட்டு, அவருக்கு பிரியமாய் நாம் இருக்க முடியாது.

தேவனால் ஏற்படுத்தப்பட்ட இந்த அதிகாரத்தின் ஒழுங்கு பற்றி முடிவாகவும், தெளிவாகவும் 1 கொரிந்தியர் 11:3-ம் வசனத்தில் பவுலால் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலை யாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக் கிறாரென்றும் நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன். ✪

# இயேசுவுடனான நம் உறவு!

பென்னி மார்ட்டின்

**வா**லிபர்களுக்கு வான வராம் இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துக்கள். பொதுவாக, வாலிபர்கள் நட்பு வட்டாரத்தை அதிகமாக விரும்புவார்கள். நல்ல நண்பன் தங்கள் வாழ்க்கையின் ஓர் அங்கமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். அப்படி ஒரு நண்பன் கிடைப்பான் என்று சொன்னால் என்ன விலைக்கொடுக்கவும், எதை வேண்டுமானால் இழக்கவும் தயாராக இருக்கிறார்கள். இன்றைய நாட்களில் நட்பு என்பதற்கு வாலிபர்கள் கொடுக்கும் அர்த்தம் வேறு. அதாவது நல்ல நண்பன் என்பவன் தன்னோடு சினிமா பார்க்க வரவேண்டும், தன் னோடு கெட்ட பழக்கங்களில் ஈடுபட வேண்டும் என்று அநேக வாலிபர்கள் நினைக்கின்றனர். ஆனால் இன்று நிலைமை என்னவென்றால் நாம் யாரையெல்லாம் நல்ல நண்பர்கள் என்று நினைக்கிறோமோ அவர்கள் நம் துன்ப வேளைகளில் நம்மை விட்டு ஓடிவிடுவார்கள் அல்லது நம் மோடு நட்பு வைத்துக் கொண்டே உதவிச் செய்யமாட்டார்கள். எனவே தான் நம்மீது அக்கறைக் கொண்டு உண்மையான அன்பு செலுத்தி நமக்காக உயிரையேக் கொடுத்த இயேசுவை நம் நண்பராக்கிக் கொள்ள வேண்டும். அவர் நம்மை எந்த சூழ்நிலையிலும் கைவிடவேமாட்டார், அவர் நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர். இயேசு கிறிஸ்து நமக்கு சிறந்த நண்பர் என்பதை தேவனுடைய வார்த்தையிலிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம். சரி, இயேசு கிறிஸ்து நமக்கு சிறந்த நண்பர் என்பதை பல வழிகளில் நாம் பார்ப்போம்.

### I *அவர் மரித்தோரிலிருந்து எழுந்து, இப்பொழுது எல்லாவற்றிற்கும் தலைவராக இருக்கிறார்.*

இயேசு நமக்காக வாழ்ந்து, பாடுபட்டு, இரத்தம் சிந்தி, மரித்தார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால், கிறிஸ்தவம் இயேசுவின் கல்லறையோடு முடிந்து போவதில்லை! இது தான் கிறிஸ்தவ மார்க்கத்தை மற்ற உலக மதங்களிலிருந்து வேறுபடுத்துகிறது. கிறிஸ்தவர்கள் மரித்த ஒரு தலைவருக்கு சேவை செய்வதில்லை! இயேசுவின் சீஷர்கள் இயேசுவின் கல்லறைக்கு வந்து அது காலியாக இருப்பதைக் கண்டார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதன்பின்பு தான் இரண்டு தேவதூதர்கள் அவர்களிடம் உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?

அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார் என்றார்கள் (லூக்கா 24:5,6) ரோமர் 1:5யை வாசிக்கும் போது இயேசு கிறிஸ்து தேவ சுதன் என்று பல மாக நிரூபிக்கப்பட்டார். எப்படி நிரூபிக்கப்பட்டார்? மரித்தோரி லிருந்து உயிரோடு எழுந்ததி னால். இயேசுவின் உயிர்த்தெழு தல் தான் கிறிஸ்தவ வாழ்க்கை யின் அஸ்திபாரமாயிருக்கிறது. 1பேதுரு 1:3,4 வசனங்களை நாம் வாசிக்கும்போது நம்மு டைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவ னுக்கு ஸ்தோத்திரம் உண்டாவ தாக, அவர் இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததி னாலே, அழியாததும், மாசற்ற தும், வாடாததுமாகிய சுதந்தி ரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித் தார்.

வாலிபர்களே! அந்த ஜீவ னுள்ள நம்பிக்கையைப் பற்றி தேவன் என்ன கூறுகிறார் என்ப தைக் கவனியுங்கள். அது அழி யாத, மாசற்ற, வாடாத சுதந்திர மாக இருக்கிறது என்கிறார் தேவன். அந்த சுதந்திரம் நமக்கு பரலோகத்தில் வைக்கப்பட்டி ருக்கிறது. எனவே, நாம் எத்த னை நன்றி உடையவர்களாய் இருக்க வேண்டும். இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்ததினால், நமக்கிருக்கும் ஜீவனுள்ள நம்பிக்கை நிச்சய மாகவே மகாபெரியது.

## II இயேசுவின் உயிர்த்தெழுதல் நமக்கு முக்கியமான ஒன்றாகும்.

ஒவ்வொரு கிறிஸ்தவ னுக்கும் நித்திய ஜீவன் நம்பிக் கையாக கொடுக்கப்பட்டிருக் கிறது. அந்த நம்பிக்கை எவ்வ ளவு உறுதியானது பாருங்கள்! தேவன் அதை நமக்கு வாக்காக கொடுத்திருக்கிறார். அவர் பொய் யுரையாத தேவன் எபிரெயர் 6:18,19 வசனங்களில் அந்த நம்பிக்கை நமது ஆத்தும நங்கூ ரமாயிருக்கிறது. அந்த நங்கூர மான நம்பிக்கை உறுதியும், நிலையுமானதாக இருக்கிறது. அதுமாத்திரமல்ல அது திரைக் குள்ளாக போகிறதாக இருக் கிறது. அதாவது, நமது நம்பிக் கை பரலோகத்தில் இருக்கிறது. ஒரு கப்பலை அது இருக்குமிடம் விட்டு காற்றினால் அடிபட்டு போய் விடாமல் இருக்க நங் கூரம் ஏன் தேவைப்படுகிறது? என்பதை சிந்தியுங்கள். புயல் வந்த போதிலும் ஒரு கப்பலை அது இருக்குமிடம் விட்டு காற்றினால் அடிபட்டு போய் விடாமல் இருக்க நங்கூரம் பயன்படுகிறது என்பதை நாம் அறிவோம். வாலிபர்களாகிய நாம் இல்வாழ்க்கையில் சோத னை என்னும் புயலை சந்திப் போம். ஆனால், நமக்கு நிலை யான உறுதியான ஓர் நங்கூரமி ருக்கிறது. அந்த நங்கூரம் நமது நம்பிக்கையே நாம் அந்த நம்பிக் கையைப் பற்றிக் கொண்டு இவ்வாழ்க்கையின் சோதனை களை கடந்து வர வேண்டும், நாம் நிலை தவறாமல் இருக்க வேண்டும் என்று தேவன் விரும் புகிறார்.

எபிரெயர் 2:14,15 வசனங்களில் நாம் பார்க்கும் போது இயேசு தமது மரணத்தின் மூலமாக, மரணத்தின் அதிகாரியான பிசாசுக்கு இயேசு கிறிஸ்து மிகப் பெரிய அடியைக் கொடுத்தார். அத்தோடு, ஜீவ காலமெல்லாம் மரண பயத்திலிருக்கும் நம்மையும் அவர் விடுதலையாக்கி அந்த பயத்தை நீக்கியிருக்கிறார். நாம் எப்படி மாம்சமும், இரத்தமும் உடையவர்களாக இருக்கிறோமோ அப்படியே இயேசுவும், மாம்சமும், இரத்தமும் உடையவரானார். ஆனால், இயேசு மரணத்தை ஜெயித்தார். நாமும் அப்படி மரணத்தை ஜெயிப்போம் என்று அவர் வாக்குக் கொடுத் ததின் மூலம், நம்மை மரண பயம் என்ற அடிமைத்தனத்தி லிருந்து விடுதலையாக்கி இருக்கிறார். ஆகையால் நம்மை மரண பயம் என்ற அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி இருக்கிறார். ஆகையால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் சாவு எனக்கு ஆதாயம், மரித்து கிறிஸ்துவோடிருப்பது எவ்வளவு மேலானது என தைரியமாக கூற முடியும் (பிலிப்பியர் 1:21-23). 1கொரிந்தியர் பதினைந்தாம் அதிகாரம் இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்ததைப் பற்றியும் நாமும் அப்படி எழுப்பப்படுவோம் என்பது பற்றியும் பேசுகிறது. இயேசு கிறிஸ்து வேத வாக்கியங்களின்படியே மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். நமது இரட்சகரும், ஆண்டவருமாகிய இயேசு இவைகளை நமக்காக அன்போடு செய்ததின் மூலம் நாம் பாவத்தின் மீதும், மரணத்தின் மீதும் ஜெயம் கொள்ளுகிறோம். இதற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

வாலிபர்களே! இது காறும் நாம் வேத வசனங்களின் வெளிச்சத்தில் இயேசு கிறிஸ்து எப்படி நம்முடைய சிறந்த நண்பராயிருக்கிறார், அவர் நமக்காக என்னென்னனப்பாடுகளை பட்டிருக்கிறார் என்று பார்த்தோம். இயேசு நம்முடைய நண்பராவதற்கு எத்தனையோ தியாகங்களை செய்திருக்கிறார். இப்போது இயேசுவை நம்முடைய சிறந்த நண்பராக்கிக் கொள்ள நீங்கள் ஆயத்தமா? இயேசு நம்முடைய நண்பராக இருக்கும் போது நம் கவலைகளை நாம் சுமக்க வேண்டியதில்லை, கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடலாம். ஏனென்றால், அவர் நம்மை விசாரிக்கிறவர், இயேசுவைப் போல ஒரு சிறந்த நண்பரை நாம் எப்போதுமே பெற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால், அவர் நமக்காக தம்முடைய ஜீவனையேக் கொடுத்து அன்பு செலுத்தியிருக்கிறார். இயேசுவுக்கு நண்பராக நாம் பெரிதாக ஒன்றையும் செய்ய வேண்டியதில்லை. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளுவது தான்! ✪

சிறுவர் பகுதி

# நடத்தையினால் பாடம் தரும் நத்தை

**ABEL. R. NAYAGAM**

**எ**னக்கு பிரியமான தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் மீட்பர் இயேசு வின் நாமத்தில் வாழ்த்துக்கள். இம்மாதமும் உங்களை இதன் மூலம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். மாதந்தோறும் வெளிவரும் காரியங்கள் பயனுள்ளதாய் இருக்கும் என நம்புகிறேன். இந்த மாதம் ஒரு புது விதமான பாடத்தை கற்றுக் கொள்ளப்போகிறோம். சரி, பாடத்திற்கு போகலாமா?

தன் உடலையே பாதமாக வைத்திருக்கும் ஒன்றை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? வாயையும் பாதத்திலே வைத்திருக்கிறது. அது, அந்த அது எது என்று யோசிக்கிறீர்களா? வேறொன்றுமில்லை நம்மெல்லாருக்கும் தெரிந்த நத்தை (Snail) தான் அந்த அது. அதினுடைய பாதம் தான் உடம்பு. உடம்பின் முன் பகுதி தலை என்கிறோம். அந்த தலை மீது உணர்வுகளை அறிய உறுப்புகள் நான்கு உள்ளது. (Tentaclos) இதில் இரண்டு கண்கள். மீதி உள்ள இரண்டு உணர்வறியும் உறுப்பு. கண்கள் அதன் நுனியில் இருப்பதால் சுற்றிலும் பார்க்கும் திறன் படைத்திருக்கிறது.

நத்தைகள் சிறியது முதல் பெரியது வரை உலகின் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. சிறிது என்றால் ஊசி முனையை போலவும், பெரிய நத்தை என்பது பூனையைப் போலவும் இருக்கும். அவற்றுள் பெரும்பாலானவைகள் தண்ணீரில் வாழ்கின்றன. அவ்வாறு வாழ்பவைகள் மீன்களைப் போன்று சுவாசிக்கின்றன மற்றும் சில நத்தைகள் நிலத்தில் வாழ்ந்து நம்மைப் போன்று நுரையீரலின் உதவியோடு சுவாசிக்கின்றன. பெரும்பாலான வகைகள் விஷத்தன்மை உடையவைகளாய் இருக்கின்றன.

தேவனுடைய படைப்பிற்கே உரிய தனித்தன்மையை நாம் இந்த நத்தைகளிலும் பார்க்கலாம். தனிச்சிறப்பை உடைய சில விஷயங்கள் நத்தைகளிடம் உண்மையாகவே இருக்கின்றன. அவற்றை காண்போமா?

முதலாவது, நத்தைகள் தங்களுக்கென்று ஒரு வீட்டை கட்டுகின்றன. அதைத்தான் நாம் ஓடு என்கிறோம். அந்த ஓட்டை நத்தைகள் தங்கள் பின்னாலேயே சுமந்து கொள்கின்றன. நத்தை வளரும் போது அந்த ஓடும் அதற்கேற் றவாறு வளருகின்றது. அந்த ஓட்டின் நன்மை என்ன? என்று பார்க்கலாமா? முக்கியமாக, இந்த ஓடுகள் இவற்றிற்கு எதிரியிடமிருந்து "பாதுகாப்பைத்" தருகிறது. எதிரிகள் யார்? தவளை, எலி, பறவைகள்

ஆகியவைகள் எதிரிகளாக இருக்கின்றன. இவற்றிடம் இருந்து நத்தைக்கு பாதுகாப்பு தருவது ஓடுதான்.

மேலும் "தாங்க முடியாத வானிலையிலிருந்தும் பாது காக்கிறது" (மழை, கடும் வெயில்) நத்தை தன்னை எப் பொழுதும் ஈரமாகவே வைத் துக் கொள்ளும் தன்மை உடை யது. காற்று, வறண்ட காற்றாக வீசினால் ஓட்டினுள் சென்று மறைகிறது. மழையே பெய் யாத ஒரு சூழ்நிலை இருப்பின் அவைகள் ஓட்டின் உள்ளாக சென்று அந்த ஓட்டின் திறந்த பகுதியை (ஓட்டையை) ஒரு வித திரவியத்தை (Slime) வைத்து மூடிக்கொள்கின்றன. அப்படி ஓட்டினுள் சென்ற நத்தை மழை பெய்யும் வரை உள்ளே யே தங்கி இருக்கும்.

**இரண்டாவதாக,** நிலத்தில் வாழும் நத்தைகள், நிலத்திற்கு கீழே புதைந்து "மழை காலங் களில் தூங்குமாம்". பின் பனி காலம் முடிந்தவுடன் அவை வெளியே வந்து உணவை தேடு கின்றன.

**மூன்றாவதாக,** நத்தைகள் தங்களுக்கென்று ஒரு "வழியை உண்டு பண்ணுகின்றன". அவை கள் திரவியத்தைக் கொண்டு (Slime) தங்களுக்கென்று ஒரு வழியை ஆயத்தம் பண்ணுகின் றன. அவைகள் அந்த திரவியத் தின் மூலம் தங்கள் எதிரிகளை சிக்க வைக்கின்றன. இதன் மூலம் ஒருவித பாதுகாப்பும் கிடைக் கிறது.

**நான்காவது,** அவைகளிடம் பற்கள் இல்லை. ஆனால் அவை களுடைய நாக்கு மிகவும் கடினமாய் இருக்கின்றன. அவற் றை வைத்து தன்னுடைய உண வை அது உட்கொள்கிறது.

இவ்வாறு பல விநோத மான தனித்தன்மை வாய்ந்த செயல்களை இவைகள் செய் கிறதே! இது எப்படி? அதன் உடல் அமைப்பு அதற்கேற்ற வாறு அமைந்திருக்கிறது. இந்த நத்தை நமக்கு என்ன பாடம் தருகிறது? நத்தையின் மூலம் நமது தேவனுடைய படைப் பின் மேன்மையையும், அவரு டைய ஞானத்தின் மகத்துவத் தையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

அப்படிப்பட்ட தேவனை நாம் தெய்வமாக கொண்டிருக் கிறோம். எனவே, அந்த வல்ல மை படைத்த தேவனுடைய கிரு பையையும் இரக்கத்தையும் நாமும் பெற்றுக் கொள்ள, நத்தைகளைப் போல நாம் தேவனுக்கு சாட்சியாய் இப்பொ ழுதிருந்தே ஜீவிக்க வேண்டும். நீங்கள் தயாரா?

## மகிழ்ச்சி

**ம**கிழ்ச்சி என்பது நம்மிடம் என்ன இருக்கிறதோ அதைப் பொறுத்து அமைவ தில்லை. ஆனால், நம்மிடம் இருக்கிறவை களைக் குறித்து நாம் என்ன நினைக்கிறோம் என்பதைப் பொறுத்து தான் அமையும். நாம் குறைவானவைகளைக் கொண்டு குதூகலமாக இருக்கவும் முடியும், அதிகமானவைகளினால் அல்லல்படவும் முடியும்.

நீங்கள் உங்கள் மகிழ்ச்சியை மற்றவர் களிடம் பகிர்ந்து கொள்ளும் போது அதன் உண்மையான மதிப்பை இரட்டிப்பாக்கு கிறீர்கள். எனவே, மகிழ்ச்சியை உங்களுக் குள்ளேயே அடக்கி வைக்காதீர்கள்.

# “ துருவின் சாட்சி ” நூலில் இருந்து

## பாடம் - 7 துருவின் சாட்சி

## தசமபாகம் பற்றிய காரியங்கள்

### நோக்கம்

தசமபாகம் கொடுப்பது பற்றிய பிரமாணம் எப்போது தொடங்கியது, எப்போது முடிவுக்கு வந்தது என்பதை அறிந்து கொண்டு, நாம் இப்போது மோசேயின் பிரமாணத்தின் கீழ் இல்லாமல் கிருபையின் காலத்தில் இருக்கிறோம் என்ற உண்மையை மனதில் இருத்துவது.

### உங்கள் சிந்தனைக்கு

தானதர்மம் என்ற பிறப்பின் மூலமாக பொருளாசையின் மரணம் வருகிறது.

### முன்னுரை

கொடுத்தலைப் பற்றி ஒரு சராசரி சபை விசுவாசியிடம் சபையிலோ, வேத வகுப்பிலோ குறிப்பிட்டால் கூட, சில சகோதரர்கள் நாம் தசமபாக பிரமாணத்தின் கீழ் இல்லை என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்கிறவர் அறிவாளிபோல் தோற்றமளிக்கிறார். அப்போது அனைவரது முகத்திலும் புன்னகை பூக்கிறது. இவைகளையெல்லாம் வைத்து நாம் அனுமானிக்கும் போது, நாம் மோசேயின் பிரமாணத்தின் கீழ் இல்லை. ஆகவே, நாம் விரும்பியபடி கொடுக்கலாம் என்று நினைப்பது போலவே தெரிகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இப்படிப்பட்ட நபர் கிறிஸ்தவத்தை தன்னுடைய பேராசைக்கு தீனி போடும் ஒன்றாக மாற்றவே முயற்சி செய்கிறார். நாம் மோசேயின் பிரமாணத்தின் கீழ் இல்லாமல் கிருபையின் கீழ் இருப்பது உண்மைதான். நாம்

> ***கர்த்தருக்குக் கொடுத்தலை சிலர் லேசாக எடுத்துக் கொள்கிறார்கள் என்பது வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும்.***

கர்த்தருக்குக் கொடுத்தலைப் பொறுத்தவரை, நாம் நியாயப் பிரமாணத்தின் கீழ் இல்லாவிட்டாலும் அதைவிட அதிகமாகக் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். கர்த்தருக்குக் கொடுத்தலை சிலர் லேசாக எடுத்துக் கொள்கிறார்கள் என்பது வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும். யூதர்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த போது, இஸ்ரவேல் என்கிற சிறிய தேசத்திற்கு பொறுப்பாளியாக இருந்தார்கள். ஆனால், முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் பொறுப்பு நமக்கு இருக்கிறபடியால், இந்த

மாபெரும் பணியை நிறைவேற்ற தசமபாகத்தை விட அதிகமாக தேவைப்படும் என்பதை கர்த்தர் அறிந்திருந்தபடியால், அவர் மனிதனை தசம பாக பிரமாணத்தின் கீழிலிருந்து எடுத்து அவர் முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்குத் தேவையானதைக் கொடுக்கத் தக்கதாக கிருபையின் காலத்தின் கீழ் வைத்தார். இன்று நாம் முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தை அறிவிப்பதிலிருந்து நம்மைத் தடுப்பது நம்முடைய கஞ்சத் தனமான காணிக்கை தான். இலட்சக் கணக்கான மக்கள் கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை கேள்விப்படாமல் இருப்பதன் காரணம், சபையின் சராசரி அங்கத்தினர் சரியாக கொடுக்காமல் இருப்பதும், அநேகர் கொடுக்க மறுப்பதும் தான். இன்னும் சிலர், கொடுத்தலினிமித்தம் சபையை விட்டு வெளியேறவும், இப்படிப் பட்ட எண்ணங் கொண்டவர்களை வைத்து தனியாக சபைகளை ஆரம்பிக்கும் அளவுக்குத் துணிகரம் கொள்கின்றனர். இங்கே, நான் என்ன பேசுகிறேன் என்பதைத் தெரிந்து தான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

எனக்கு தெரிந்து ஒரு சிறு கூட்டம் கொடுத்தலைப் பற்றிய காரியங்களைப் படிப்பது தங்களுக்கு பாவமாகத் தோன்றின படியால், சபையிலிருந்து பிரிந்து சென்று தனியாக ஒரு சபையை தொடங்கிவிட்டார்கள். ஒரு பிராந்திய சபையில் தன்னை சுவிசேஷப் பிரசங்கியார் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு பெரியவர் (அவர் முழு நேர ஊழியராயிராமல் பகுதி நேர ஊழிய ராக இருக்கிறபடியால் தேவனுக்கு ஸ்தோத்திரம்) கொடுப்பது பற்றி முறையான வகுப்பை ஒருவர் எடுத்துக் கொண்டு இருக்கும் போது, சபையில் திடீரென எழுந்து நான், ஆயிர வருட அரசாட்சி கொள்கையை எதிர்க்கிறேன், மார்க்க பிரிவினை கூட்டத்தை எதிர்க்கிறேன் என்று சொன்னார். அதன் பிறகு அவர் ஒரு கொடிய மிருகத்தைப் போல நடந்து கொண்டார். முதலாம் உலகப் போருக்கு பின்பு, அச்சபையில் நடந்த குறிப்பிடத்தக்க சம்பவம் இதுதான் என்று நினைக்கிறேன். இதுபோன்ற சபையானது, ஒரு சமுதாயத்தில் ஐம்பது வருடங்களாக இருந்தும் ஐம்பது உறுப்பினர்களே இருப்பது ஏன் என்பதை இப்பொழுது ஒருவரால் புரிந்து கொள்ள முடியும். நாம் இந்த பாடத்தை திறந்த மனதோடும் நேர்மையான இருதயத்தோடும் படிப்போம்.

### I தசமபாகம் கொடுப்பது எப்போது ஆரம்பமானது?

அநேக வருடங்களாக பிரசங்கியார்கள் தசமபாக பிரமாணம் யாக்கோபிடமிருந்து தொடங்கியது எனப் பேச கேட்டிருக்கிறேன். ஆனால், வேதாகமத்தை நாம் படிக்கும் போது யாக்கோபின் தாத்தாவான ஆபிரகாம் தசமபாகம் கொடுத்ததை நாம் வாசிக்கிறோம். இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்; கோத்திரத் தலைவனாகிய ஆபிரகாம் முதலாய்

கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான் (எபிரெயர் 7:4). எனவே, தசமபாகம் கொடுப்பது யாக்கோபிலிருந்தும் தொடங்கவில்லை, மோசேயின் பிரமாணத்திலிருந்தும் தொடங்கவில்லை. அப்படியென்றால், எப்போது தொடங்கியது? எல்லா சாத்தியக் கூறுகளோடும், தசமபாகப் பிரமாணம் ஒரே ஒரு குடும்பம் இருந்த ஆதாமின் நாட்களுக்கே செல்கிறது. மக்கள் பலுகிப் பெருகி உலகம் முழுவதும் பரம்பி, ஆராதனையைக் கெடுத்துப் போட்டு தங்கள் கைகளினாலேயே தெய்வங்களை உண்டு பண்ணினபோது கூட அவர்களெல்லாரும் ஒரே குடும்பமாயிருந்தபடியால் அவர்களை கட்டுப்படுத்தின தசமபாகப் பிரமாணத்தை நினைவு கூர்ந்தார்கள்.

உண்மையில் தசமபாகம் கொடுப்பது ஆதிகாலந் தொட்டே செய்ய வேண்டிய ஒன்றாக இருந்து வந்துள்ளது. ஆபிரகாம் நினைவு கூரத்தக்க ஒரு சந்தர்ப்பத்தில் தசமபாகம் கொடுத்தான். (ஆதியாகமம் 14:20) யாக்கோபு மற்றொரு தருணத்தில், தேவனுக்கு தசமபாகம் செலுத்துவதாக பொருத்தனை பண்ணிக் கொண்டான். (ஆதியாகமம் 28:22).

நீங்கள் உங்கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி என் கட்டளைகளைக் கைகொள்ளாமல், அவைகளை விட்டு விலகிப் போனீர்கள்; என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; நாங்கள் எந்த விஷயத்தில் திரும்ப வேண்டும் என்கிறீர்கள். மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்களா? தசம பாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே நீங்கள் சபிக்கப் பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள். என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசம பாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங் கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (மல்கியா 3:7-10).

தேவனை வஞ்சித்தல் என்கிற பாவம் : இங்கே கண்டிக்கப் படுகிற தசமபாகத்திலும், காணிக்கையிலும் தேவனை வஞ்சிக்கிற பாவமானது, தசமாகப் பிரமாணத்தைப் போலவே பழமையானது, இது பாவத்தின் வெளிப்பாடாயிருக்கிறது. இவ்வகையான பாவம் இந்நாள் வரைக்கும் எல்லா தேசங்களிலும் காணப் படுகிறது.

எபிரெயர்கள் மாத்திரமல்ல, வேறு பழங்காலத்து மக்களும் தங்களுடைய விளைச்சலில், மந்தைகளில் கொள்ளையிட்ட பொருள்களில் பத்தில் ஒரு பங்கை பரிசுத்த நோக்கங்களுக்காக கொடுத்திருக்கிறார்கள். கிரேக்கர்கள் அப்போல்லோவுக்கும்,

ரோமர்கள் ஹெர்குலசுக்கும் பத்தில் ஒரு பங்கை கொடுத்திருக் கிறார்கள். பத்தில் ஒரு பங்கை அவர்கள் தங்கள் கடவுள்களுக்கு கொடுக்க வேண்டு மென்பதற்காக கொடுக்காமல், தாங்களாகவே முன்வந்து கொடுத்திருக்கிறார்களே. பக்தி காரியங்களுக்கு கொடுப்பதை அவனவன் விருப்பத்திற்குக் கொடுக்கலாம் என்பது ஒவ்வொரு மனிதனின் முடிவுக்கு விடப்பட்டிருக்குமானால், எப்படி ஐந்தில் ஒரு பங்கு, பதினைந்தில் ஒரு பங்கு, இருபதில் ஒரு பங்கு என்று இப்படியாக இல்லாமல், தேவனுடைய பங்காகிய பத்தில் ஒரு பங்கை இத்தனை பேர் கொடுத்திருக்க முடியும். அது, அந்நாட் களில் கூடி ஒன்றாக வாழ்ந்த முன்னோர்கள், பொது வான ஒரு ஆதாரத்திலிருந்து இப்படிச் சரிவிகிதமாகக் கொடுப் பதை கற்றுத் தெரிந்திருக்கிறார் கள் என்பது நமக்குச் சொல்லு கிறதா? இல்லையா? மத வரலாற்றை நாம் படிக்கும் போது, எகிப்தியர்கள், பாபிலோனியர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள் இன்னும் பிற இனத்தைச் சேர்ந்த அநேகர் பத்தில் ஒரு பங்கைக் கொடுத் திருக்கிறார்கள் என்பதை நாம் கற்றுக் கொள்ளலாம். இப்படி தேவனுக்குப் பத்தில் ஒரு பங்குக்கும் குறையாமல் கொடுக்கும் பழக்கம், இப்பூமியில் ஒரே ஒரு குடும்பம் இருந்த காலத்திலேயே தொடங்கியிருக்க வேண்டும். இவர்கள் பூமியெங் கும் சிதறிப் போய், விக்கிரக வணக்கத்திற்குள்ளான நிலையிலும், தேவனுக்குக் கொடுக்கும் அளவாகிய இச்சட்டமானது அவர்கள்

***கிரேக்கர்கள் அப்போல்லோவுக்கும், ரோமர்கள் ஹெர்குலசுக்கும் பத்தில் ஒரு பங்கை கொடுத்திருக்கிறார்கள்.***

மனதில் பதிந்து, அவர்கள் அதை மறவாமல் பின்பற்றியிருக்கிறார் கள். தேவன் ஆரம்பத்திலிருந்தே, ஆதாமுக்கு ஒவ்வொரு மனித னும் தன்னுடைய விளைச்சலில் ஒரு பங்கை தன்னை உண்டாக் கின வருக்குக் கொடுக்க வேண்டும், அந்த பங்கு பத்துக்கு குறை யாததாக இருக்க வேண்டும் எனப் போதித்திருந்தால், அப்போது ஆதியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்கள் எல்லாம் இந்த கருத்தை மேலும் பலப்படுத்தும். எனவே, அனனியா, சப்பீராளிடத்தில் பொருளாசை இருந்தது போல காயீனிடத்திலும் பொருளாசை இருந்திருக்கலாம் என நாம் முடிவுக்கு வரலாம். ஏனென்றால், இவர்கள் கொடுக்கப்பட்ட தொகையை விட அதிக மாக கொடுப்பது போல பாசாங்கு செய்தார்கள். அதன் மூலம் அவர்கள் சர்வ வல்லவரை வஞ்சிக்க முயற்சி செய்தார்கள்.

ஆதியாகமத்தை வாசிக்கும்போது, பத்தில் ஒரு பாகம் சட்டம் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லையே என்று சிலர் எதிர் கருத்து கூறக்கூடும். கொலைக்கு எதிரான ஒரு சட்டம் ஆரம்பத் திலிருந்தே இருந்ததென்பதைச் சந்தேகிக்கிறீர்களா? காயீன் அதற் காகத்தானே தண்டிக்கப்பட்டான். அதைப்போல வேசித்தனத் திற்கு எதிரான பிரமாணம் இருந்ததா? நிச்சயமாக இருந்தது.

அதனால் தான் யூதா தாமாரைப் பார்த்து, அவளை வெளியே கொண்டு வாருங்கள் அவள் சுட்டெரிக்கப்பட வேண்டும் என்றான். (ஆதியாகமம் 38:24) கொடுத்தல் சம்பந்தமாக எந்த ஒரு பிரமாணமும் இல்லையென்றால் தேவன் ஏன் காயீனை தண்டிக்க வேண்டும்?. சிலர் ஆபிரகாமின் நாட்கள் வரை தசம பாகம் குறிப்பிடவில்லை என்று சொல்வார்கள். ஆபிரகாமுக்கு முன்னால் யாரும் தசம பாகம் கொடுக்கவில்லை என்றால் இந்த வகை வாதத்தை நாம் மற்ற சம்பவங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

உதாரணமாக, மெல்கிசெதேக்கு வேதாகமத்தில் ஆசாரியனாக அழைக்கப்பட்ட முதல் மனிதனாக இருந்திருக்கிறார். சிநெயாரின் ராஜாவான அம்ராப் பேல் வேதாகமத்தில் முதல் ராஜாவாக குறிப்பிடப்பட்டிருக்கிறான். அதைப் போல ஆபிரகாம் முதல் தீர்க்கதரிசியாக அழைக்கப்படுகிறார். இந்த மூன்று பேருக்கும் முன்பே, பல நூற்றாண்டுகள் மனித இனம் இந்த பூமியில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அப்படியானால், மனித இனம் பல நூற்றாண்டுகளாக இராஜாக்களும், ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும் இல்லாமலும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்று பொருள் கொள்ள முடியுமா? அதே போல் நோவா முதல் நீதிமானாக விவரிக்கப்பட்டிருக்கிறார். ஆயினும், இவர்களுக்கு முன்பாகவே ஆபேலும், ஏனோக்கும் நீதிமான்களாக இருந்து தேவனை விசுவாசித்திருக்கிறார்கள். ஆக, கிடைத்த ஆதாரங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது, கர்த்தர் மனிதனிடமிருந்து குறைந்தது பத்தில் ஒரு பங்கை எதிர்பார்த்திருக்கிறார் என்கிற முடிவுக்கு வரலாம். தசமபாகமானது இந்த பூமியில் ஒரு குடும்பம் இருந்தபோது ஆரம்பமாகி, மனிதர்களால் பூமியெங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டது என்று உறுதியாக நம்பலாம். ✪

(தொடரும்)

## எபிரெயர் புத்தகத்திலிருந்து "நாம்"

1. "நாம்" பயந்திருக்கக்கடவோம் (எபி. 4:1)
2. "நாம்" இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம் (எபி. 4:11)
3. "நாம்" பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம் (எபி. 4:14)
4. "நாம்" தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம் (எபி. 4:16)
5. "நாம்" பூரணராகும்படி கடந்து போவோம் (எபி. 6:2)
6. "நாம்" ஒருவரையொருவர் கவனிக்கக்கடவோம் (எபி. 10:24)
7. "நாம்" பொறுமையோடே ஓடக்கடவோம் (எபி. 12:1)

தொடர் கட்டுரை

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

K. பாஸ்கர்

## பாடம் - 4. ஏக மனது ஏக யோசனை

வசன ரீதியான கிறிஸ்துவின் சபையானது ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றார். (1கொரி. 1:10)

இந்த இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழும் நாம் அனைவரும் வருங்கால சந்ததியினருக்காக நன்மை செய்ய வேண்டுமென்றால் நாம் ஏகமனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாக இருக்கவேண்டும்! பிரிவினைவாதங்களும், மதக்கலவரங்களும் இருக்கின்ற இந்த நாட்களிலே, இந்த உலகிற்கு ஒற்றுமையை வலியுறுத்துவோம், அதற்கு இந்த பாடம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். ஏனென்றால் ஞானிசாலமோன் புத்திமதிகளைக் காத்துக்கொள்ளுகிறவன் ஜீவ வழியில் இருக்கிறான். என்று கூறியிருக்கின்றார். (நீதி. 10:17) நாம் கிறிஸ்துவுக்குள் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாக இருக்க சில புத்திமதிகளை இந்த பாடத்தில் படிப்போமாக.

### I ஏன் ஏகமனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்?

அப்போஸ்தலனாகிய பவுல் தனது இரண்டாவது சுவிசேஷப் பயணத்தின் போது அதாவது கி.பி. 57,58ல் கொரிந்து பட்டணத்திற்குச் சென்று சுமார் ஒன்றரை ஆண்டுகள் அங்கே தங்கி சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். (அப். 18:1-11) அப்பொழுது தான் அங்கு சபை ஸ்தாபிக்கப்பட்டது. அப்போது இந்த பட்டணம் மிகவும் செல்வாக்கு பெற்றதாக இருந்ததால் மிகவும் பிரசித்திப் பெற்று. நாகரீகத்தில் சிறந்து விளங்கிற்று அதோடு துன்மார்க்கமும் அதிகமாக அங்கு காணப்பட்டது. வேசித்தனத்தை ஒரு பாவமான செயல் என்பதை அறியாமல் அதுவும் நாகரீகத்தில் ஒன்று என்று கருதியிருந்தனர். அவர்களில் அநேகர் சபைக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்களாக இருந்தார்கள். ஆதலால் சபைக்குள்ளும் விபச்சாரம் வேசித்தனம் மிகவும் பிரபலமாக இருந்தது (1 கொரி. 5:1-2).

கொரிந்து பட்டணத்திலுள்ள விசுவாசிகளிடத்தில் ஒற்றுமையைக்காட்டிலும் வேற்றுமை உணர்வுகள் அதிகமாகக் கொண்டிருந்தனர்.

அவர்களில் சிலர் பவுல் மூலமாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் பவுலைச் சேர்ந்தவன் என்றும், பேதுரு மூலமாக ஞானஸ்நானம் பெற்றவர் கேபா (பேதுரு) வைச் சேர்ந்தவன் என்றும் சிலர் அங்கு ஊழியம் செய்து வந்த அப்பொல்லோ என்பவர் மூலமாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் அப்பொல்லோவைச் சேர்ந்தவன் என்றும் சிலர் எந்த ஒரு மனிதனின் பெயரைச் சொல்லாமல் கிறிஸ்துவைச் சேர்ந்தவன் என்றும் பெருமையுடன் சொல்லிக் கொண்டிருந்தனர் (1கொரி. 1:12) இவ்வாறு அவர்கள் சொல்லிக் கொண்டு இருந்தபடியால் அவர்கள் ஆவிக்குரியவர்கள் அல்ல மாம்சத்திற்குரியவர்கள் என்று பவுல் அவர்களுக்கு எழுதினார் (1கொரி. 3:3) அவர்களுக்குள் ஏக மனதும், ஏக யோசனையும் இல்லை! மாறாக பிரிவினைச் செயல்கள் அதிகமாகக் காணப் பட்டது. இந்த பிரிவினைச் செயல்களைத் தடுப்பதற்காக, ஒற்று மையை வலியுறுத்தி உடனே எழுதினார் அப்போஸ்தலனாகிய பவுல் (1கொரி. 1:10).

நாம் ஏன் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்றால் பிரிவினையைத் தடுப்பதற்காகவும் ஐக்கியத்தை நிலைநாட்டுவதற்காகவும் நாம் ஆவிக்குரியவர் களாய் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டவும், வருங்கால சந்ததி கிறிஸ்துவின் சபையில் நிலைநிற்கவும் நாம் ஏகமனதும் ஏக யோசனையும் உள்ளவர் களாய் இருக்க வேண்டும்.

ஏசாயா 11:1-10 வசனங்களில் ஈசாயென்னும் அடிமரத்தி லிருந்து ஒரு துளிர் தோன்றி அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும். அந்தக் கிளை என்பது இயேசு கிறிஸ்து தாவீதின் சந்ததியில் தோன்றி அவர் தமது சபையை ஸ்தாபித்து அது உலக முழுவதும் செழிக்கும்! அந்த கிறிஸ்துவின் சபையில் மிருக குணம் கொண்டவர்கள் தங்கள் குணங்களை விட்டு மனந் திரும்பி இருப்பதை இந்த வசனப் பகுதியில் காணப்படுகின்றன. அதாவது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும் புலி வெள்ளாட் டுக் குட்டியோடே படுத்துக் கொள்ளும், கன்றுக்குட்டியும், பால சிங்கமும், காளையும் ஒருமித்திருக்கும். ஒரு சிறு பையன் அவை களை நடத்துவான் என்ற உருவகச் சொல் ஒற்றுமையை வலியு றுத்துகிறது. ஒன்றுக்கொன்று முரண்பாடுள்ள மிருகங்கள் தங்கள் சுபாவத்தை விட்டு ஒருமித்து இருக்கிறது போல நாமும் நம்மு டைய சுபாவத்தை விட்டு சபையில் ஒருமித்த கருத் துடன் செயல் படவேண்டும். நாம் சபையில் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் இருப்பதற்கு நமது எவைகள் இடறலாக இருக்கிறதோ அவைகளைத் தரித்தெரிய வேண்டும். (மத். 5:29-30).

## II எதற்கு ஏகமனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு தமது சீஷர்களோடு உரையாடி அவர் களுக்காக ஊக்கமாக ஜெபித்தார். அந்த ஜெபத்தில் முக்கியமாக ஒற்றுமைக்காக ஜெபித்தார். எதற்காக அவர் ஜெபித்தார் என்றால், அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும் பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னி லேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்கள் எல்லா ரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன் என்றார். (யோ 17:21).

இந்த வசனப்பகுதியில் எதற்காக ஏகமனதும், ஏக யோச னையும் உள்ளவர்களாய் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதை இயேசு கிறிஸ்து கூறுவதை கவனித்துப் பாருங்கள். முக்கியமாக இயேசு கிறிஸ்துவை உலகம் விசுவாசிக்கிறதற்காக நாம் ஒன்றா யிருப்பது அவசியமாக உள்ளது. இந்த உலகத்தை ஒட்டு மொத் தமாக கிறிஸ்துவை விசுவாசிக்கச் செய்ய வேண்டிய கடமை நம்மிடத்தில் தேவன் கொடுத்துள்ளார். நாம் ஒற்றுமையுடன் ஒரே சபையில் இருந்து கொண்டு சுவிசேஷத்தை அறிவித்தால் நிச்சயம் இவ்வுலகத்தை முழுவதுமாக கிறிஸ்துவுக்குள் கொண்டு வர முடியும்! ஆனால், நம்மில் அநேகர் பல பிரிவுக்கூட்ட சபைகளில் இருந்து கொண்டு தங்கள் உடல், பொருள், ஆவி முழுவதுமாக அதற்குக் கொடுத்துவிட்டு நான் கிறிஸ்துவுக்காக எல்லா வற்றையும் கொடுத்துவிட்டேன் என்று கூறுகிறார்கள்! இது கிறிஸ் துவுக்காக அவருடைய சபைக்காக கொடுக்கவில்லை மாறாக இது மனிதனால் உண்டாக்கப்பட்ட சபைக்காகவும், அந்த ஸ்தா பனத்திற்காகவும் தான் செய்திருக்கிறார்கள். மற்றபடி கிறிஸ்து வுக்காக இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த உலகமும் அதின் குடிகள் அனைவரும் கர்த்தரு டையது. (சங். 24:1) ஆகவேதான் ஆண்டவர் இயேசு கிறிஸ்து உலகத்தை நியாயம் தீர்க்க வராமல் உலகத்தை இரட்சிக்க வந்தார். (யோ 12:47) அவர் வந்து எந்த பிரிவுக்கூட்ட ஸ்தாபனங் களையும் ஸ்தாபிக்கவில்லை தன்னுடைய சபையை மட்டும் ஸ்தாபித்தார் (மத். 16:18) அவர் தனது சரீரமாகிய சபைக்கு எல்லாவற்றையும் கொடுத்தார் (எபே. 1:23). நாம் இந்த உலகத் தை இரட்சிப்புக்குள் கொண்டு வர அவருடைய சரீரமான சபை யில் இருந்து கொண்டு நாம் எல்லாவற்றையும் கொடுக்க முன் வரவேண்டும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுவதை கவனியுங்கள்... என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் வீட்டையா வது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையா வது, தாயையாவது, மனைவியாவது, பிள்ளைகளையாவது

நிலங்களையாவது விட்டவன் எவனும் இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடே கூட நூறுத்தனையாகப் பெற்றுக்கொண்டு மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மாற்கு 10:29,30) நாம் இவ்வுலகத்தை கிறிஸ்துவுக்குள் கொண்டு வரும் முயற்சிகளைக் கர்த்தர் பார்க்கின்றார். நமது பாரம்பரியங்களை விட்டு கிறிஸ்துவின் சபைக்கு வருவதற்கு எவைகள் தடையாக இருக்கிறதோ அவைகளை விட்டு விட வேண்டும். நாம் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றால் பிரிவுக் கூட்ட சபையில் இருக்க கூடாது. அங்கு இருந்தால் நிச்சயம் ஒற்றுமையான குணம், மனம் இருக்காது.

இந்த உலகம் கிறிஸ்துவை விசுவாசிப்பதற்காக நாம் எல்லாவற்றையும் நஷ்டமாக எண்ணி எவைகளை விட வேண்டுமோ அவைகளை விட வேண்டும். ஒற்றுமைக்காக, ஏகமனதும், ஏக யோசனையும் இருப்பதற்காக நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். (1கொரி. 6:7) அது நமது பட்டம், பதவி, செல்வம், புகழ் என்று எதுவாக இருந்தாலும் அவைகளை கிறிஸ்து வுக்காக நஷ்டமென்று எண்ண வேண்டும். (பிலி. 3:11) இன்றைக்கு கிறிஸ்துவை உலகம் விசுவாசிப்பதற்கு தடையாக இருப்பது நமது பணம், புகழ் மற்றும் பதவி பணத்திற்காக சிலர் பிரிந்து போய் விடுகின்றனர். புகழுக்காக சிலர் ஊழியம் செய்கின்றனர். சிலர் பதவிக்காக பிரிவினை கூட்ட சபைகளில் இருக்கின்றனர். இதனால் இந்த உலகத்தை இரட்சிக்க முடியவில்லை! இதை வாசிக்கும் அன்பானவர்களே, இந்த உலகம் கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் அதுவே தேவனுடைய விருப்பம் நாம் அனைவரும் அந்த விருப்பத்தை நிறைவேற்ற நாம் ஏக மனதும், ஏக யோசனையுமாயிருப்போம்.

---

***பணத்திற்காக சிலர் பிரிந்து போய் விடுகின்றனர். புகழுக்காக சிலர் ஊழியம் செய்கின்றனர். சிலர் பதவிக்காக பிரிவினை கூட்ட சபைகளில் இருக்கின்றனர்.***

---

## III எதற்கு ஏகமனதும் ஏக யோசனையும் இருப்பதால் பலன் என்ன?

பிரிவினைகளைத் தடுப்பதற்காக நாம் ஏக மனதும், ஏக யோசனைமாயிருக்க வேண்டும், மேலும் இந்த உலகம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதற்காக நாம் அப்படிப்பட்ட மனதை பெற்றிருக்க வேண்டும். இப்படிப்பட்ட யோசனையின் மூலம் என்ன பலன் உண்டாகும் என்றால் சீர்பொருந்துதல் உண்டாகுகின்றது. அதாவது சபை பூரணத்தை **(Perfect)** நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்று அர்த்தமாகிறது. கொரிந்துவில் காணப்பட்ட சபை பிரிவினைகளைக் கொண்டிருந்தது. (1கொரி. 1:10-13) அவர்கள் தங்களின் சுபாவத்தை மாற்றிக் கொள்ளாமல் இருந்தனர் (1கொரி. 2:14) மாம்சத்திற்குரியவர்களாக இருந்தனர் (1 கொரி. 3:4) எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணினார்கள்

(1 கொரி. 4:6) விபசாரத்தை அனுமதித்திருந்தனர் (1கொரி. 5:1-2) அவர்களுக்குள்ளே வழக்காடுதலும், வாக்குவாதங்களும் காணப்பட்டன. (1கொரி 6:1-6) அவர்களுடைய திருமண வாழ்க்கையும் முறையாக இல்லாமல் காணப்பட்டது (1கொரி. 7:1-5) விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதைப் புசித்திருந்தனர். (1கொரி. 8:1-13) சபை ஊழியருக்கு உதவி செய்யக் கூடாது என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தனர். (1கொரி. 9:1-14) விக்கிரகத்தோடு ஐக்கியமாக இருந்தனர். (1கொரி. 10:14). சபையில் ஸ்திரீகள் முக்காடு போடாமலும், ஸ்திரீகள் சபையில் போதிப்பதும் இப்படி ஒழுங்கீனமாக இருந்தனர். இவ்வாறாக அவர்கள் சீர் கேடு நிறைந்தவர்களாக இருந்தனர். ஆகவே அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களை சீர் பொருந்தும் பொருட்டு எழுதுகிறார் **(From Im Perfect to Perfect)**

வசன ரீதியான கிறிஸ்துவின் சபையானது பூரணத்தை நோக்கிச் செல்ல வேண்டும். பூரணமற்ற சபையாக இருந்த கொரிந்தியர்களை பவுல் நற்சீர் பொருந்தியிருங்கள் என்று கூறுகிறார் (**I** கொரி. 1:10, **II** கொரி. 13:11) மேலும் கிறிஸ்துவின் சரீர சபை பக்தி விருத்தியடைவதற்கு பரிசுத்தவான்கள் அனைவரும் சீர்பொருந்தியிருக்க வேண்டும். (எபே. 4:12) மேலும் வேத வாக்கியங்கள் அனைத்தும் பரிசுத்த ஆவியானவராலே ஏன் கொடுக்கப்பட்டது என்றால் நாம் அனைவரும் சீர்பொருந்தும் படிக்கே கொடுக்கப்பட்டது. (**II** தீமோ 3:16,17).

அன்பானவர்களே, நாம் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் இருப்பதின் முக்கியத்துவத்தை தெரிந்து கொண்டீர்கள். இங்கே சொல்லப்பட்டுள்ளவைகளை சிந்தித்து செயல்பட தேவன் வழிநடத்துவாராக!. ✪

**(தொடரும்)**

## கர்த்தருக்கு உண்மையாயிருக்க ஏழு வழிகள்

| | | |
|---|---|---|
| 1. | புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ள வேண்டும் | (ரோமர் 6:3,4) |
| 2. | புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள் | (1 பேதுரு 2:3) |
| 3. | மேலானவைகளை நாடுகிறவர்களாக இருக்க வேண்டும் | (கொலோ. 3:1,2) |
| 4. | நம் இரட்சகரைப் பற்றி மற்றவர்களிடம் சொல்ல வேண்டும் | (அப். 8:4) |
| 5. | கிறிஸ்தவ பண்புகளை கூட்டி வழங்குங்கள் | (2 பேதுரு 1:5-11) |
| 6. | சபை கூடி வருதலில் உண்மையாயிருங்கள் | (எபி. 10:23) |
| 7. | கிறிஸ்தவர்களாயிருப்பதினால் பாடுபட்டால் அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்துங்கள் | (1 பேதுரு 4:16) |

# எங்கே நிம்மதி?

சகோ. பாண்டியன்

நம்மை உண்டாக்கிய தேவன் மனிதர்கள் நிம்மதியாக வாழ சகல நன்மைகளையும், ஏற்பாடுகளையும் செய்து வைத்துள்ளார். ஆனால் மனிதன் அதை அறியாமல் நிம்மதியை தேடி உலகில் அலைகின்றான். இவ்வுலகம் முதல் மனிதனின் காதலைப் பற்றி யெல்லாம் வர்ணிக்கின்றது. ஆனால் அவன் தேவனோடு ஆரம்பத்தில் வைத்திருந்த தோழமையான உறவை பற்றி தெரிந்து கொள்ளவில்லை (ஆதி. 3:8,9). அந்த அருமையான ஐக்கியம் பிசாசின் வஞ்சகமான தூண்டுதலால் கெட்டுப் போயிற்று. மனிதன் தேவனோடு வைத்திருந்த அந்த மெய்யான உறவை மறுபடியும் மீட்டு மனித சமுதாயத்திற்குத் தரும்படியாகவே தேவன் தன் பிள்ளையாகிய இயேசுக் கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார் (லூக். 19:10). இதுவே வேதத்தின் மிக விசேஷித்த செய்தியாக உள்ளது. முதலாவது ஏன் மனிதன் நிம்மதியும், சமாதானமும் இழந்து போனான் என்பதை வேதத்தில் ஆராயும் போது - மனிதகுலம் பெருகியபோது அவர்கள் தேவனைப் பற்றிய தெளிவும், அக்கறையும் இல்லாததே அவர்களுடைய சமாதானமின்மைக்கு காரணமாயிற்று.

இஸ்ரவேல் ஜனங்களை தேவன் தெரிந்து கொண்டு அநேக நன்மைகளை செய்திருந்தும் அவர்கள் தேவனை விட்டு விலகி வேதத்திற்கும், உபதேசத்திற்கும் அந்நியராக போனபோது அவர்களுக்கு துன்பமும், கலக்கமும் நேரிட்டது (II நாளா 15:1-6). மனிதன் தேவனுடைய வழியை ஒதுக்கித்தள்ளி சொந்த வழியில் நடக்கும் போது அது ஒருநாள் கோணலாக மாறி நிம்மதி இழந்த வாழ்வாக மாறுகிறது (ஏசா. 59:8) உலக சமாதானத்திற்கான திட்டம் தேவனிடத்தில் மட்டுமே உள்ளது. அது கிறிஸ்துவின் பிறப்பில் அறிவிக்கப்பட்டது:- தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் உண்டாகும் (லூக். 2:14). கிறிஸ்து தம் போதனையில், மனிதன் கவலைப்பட வேண்டியதற்குக் கவலைப் படாமல் உணவுக்கும், உடைக்கும் கவலைப்படுகிறதை மதியீனம் என்று சுட்டிக்காட்டினார். மாறாக, மனிதன் தேவனைப் பற்றிய உண்மைகளை அறிய முயற்சிக்கும் போது மாத்திரமே அவனுடைய வாழ்க்கையில் ஓர் அர்த்தம் உண்டாகும் என்றும்; அவன் கவலையில்லாமல் சமாதானமாக வாழ அதுவே வழிவகுக்கும் என்றும் அவர் மக்களுக்கு உபதேசித்தார். சிலர் நினைப்பது போல் கிறிஸ்துவின் உபதேசம் உலகத்தின் ஒரு சாராருக்கு மட்டுமே

என்பது உண்மையில்லை. அவருடைய உபதேசம் சர்வ சிருஷ்டிக்கும் பொருந்துகிறதாயிருக்கிறது. இவ்வுலகில் யாரெல்லாம் நிம்மதியை தேடுகிறார்களோ அவர்களுக்கெல்லாம் கிறிஸ்துவின் உபதேசம் தேவையாய் இருக்கிறது. ஆகவேதான் சிலர் வெறுத்தாலும் நாம் தொடர்ந்து பிரசங்கித்து வருகிறோம். அதுவே கிறிஸ்துவின் கட்டளையாகவும் உள்ளது (மத். 28:20) இனி கிறிஸ்துவின் போதனைகள் எப்படி மனிதனுக்கு நிம்மதியைக் கொடுக்க முடியும் என்று பார்ப்போம்.

தேவனுக்குப் பிடிக்காத காரியங்கள், எண்ணங்கள் மற்றும் செய்கைகள் மனிதனிடம் காணப்படுகிறது. எனவே அவன் தேவனோடு உறவாடமுடியாமல் நிம்மதியிழந்து காணப்படுகின்றான். இந்நிலையை மாற்றவே தேவன் தமது ஒரே மகனை சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து மனிதனிடம் இருக்கும் அவருக்கு ஆகாத காரியங்களை எடுத்துப்போடும் வழியை ஏற்படுத்தியுள்ளார் (கொலோ 2:13,14) அதனால்தான் கிறிஸ்து வருவதற்கு சுமார் 700 வருடங்களுக்கு முன்பாகவே நமக்கு சமாதானத்தை உண்டாக்க இயேசு தண்டனை ஏற்க வேண்டும் என்று முன்னறிவிக்கப்பட்டது (ஏசா. 53:5) வேதத்திலுள்ள 66 புத்தகங்களுமே ஏதோ ஒரு வகையில் மனிதன் தேவனோடே உறவாட வேண்டியதின் அவசியத்தை நமக்கு போதிக்கின்றன. நீங்கள் யாராயிருந்தாலும் சரி, உங்கள் வாழவில் நீங்கள் கிறிஸ்துவின் உபதேசங்களுக்குக் கீழ்படியும்போது ஒரு புதுநம்பிக்கை உண்டாவதை உணர்வீர்கள். தைரியமும் தன் நம்பிக்கையும் ஊற்றெடுப்பதையும் புரிந்து கொள்வீர்கள். அதன் பலனாக இவ்வுலகமே பயந்து நடுங்கிக் கொண்டிருக்கும் மரணத்தையே பார்த்து உங்கள் மனம் கேள்வி கேட்க துணியும்:- மரணமே! உன் கூர் எங்கே? (1கொரி. 15:55) ஏனெனில் மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசை நம் ஆண்டவர் தமது மரணத்தினால் அவனை அழித்து ஜீவகாலமெல்லாம் மரண பயத்திலிருந்தவர்களை விடுதலையாக்கினார் (எபி. 2:14,15) எவ்வளவு பெரிய சமாதானம்! இதற்கு மாறாக சிலர் இன்று ஒன்றுமில்லா விஷயத்திற்கெல்லாம் தற்கொலை எண்ணங்களுக்கு ஆட்படுவதைக் காண்கிறோம். காரணம் அவர்களிடம் கிறிஸ்துவின் ஆறுதலான உபதேசங்கள் இல்லை. அது இருக்குமாயின் அவர்கள் நீதிமான்கள் என்ற ஒரு தன்னம்பிக்கையையும், தேவனிடத்தில் சாமாதானத்தையும் நிச்சயம் பெறுவார்கள் (ரோமர் 5:1) எருசலேமைக் குறித்து பாடின தாவீது அங்குதான் சமாதானமும், சுகமும் இருப்பதாக என்று சொல்கிறார் (சங். 122:7) உண்மையில் அது இப்போதுள்ள தேவனுடைய குமாரனுடைய ராஜ்ஜியமாகிய:- கிறிஸ்துவின் சபையில் தான் காணப்படமுடியும். ஏனெனில், அதுவே பரம எருசலேம் (எபி. 12:22) என்று அழைக்கப்படுகிறது. ஒரு அரசாங்கம் குடிமக்களின் அடிப்படை தேவைகளை

சந்திக்கக் கடமைப்பட்டுள்ளதைப் போல, தேவனுடைய அரசாங்கமாகிய கிறிஸ்துவின் சபையில்தான் தேவன் சமாதானத்தையும் சுகத்தையும் வைத்துள்ளார். சரி நாம் சபையில் இருக்கும் போது எப்படி சமாதானத்தைப் பெறுகிறோம் என்பதை கவனிப்போம்.

**I கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார் (சங். 29:11):**

சபையில் இருப்பவர்கள் இயேசுக் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற ரத்தத்தினால் கிரயமாகக் கொள்ளப்பட்டவர்கள். (I கொரி. 6:20) நாம் அவருடைய ஜனமாக மாறியபின் அவிசுவாசிகளிடமிருந்து பிரிந்து விக்கிரகங்களிடமிருந்து விலகி விடுவதால் தேவனுக்கு குமாரரும் குமாரத்தியுமாக மாறி விடுவதால் சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் பெறுகிறோம் (II கொரி. 2:14-18)

**II உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு (சங். 119:165)**

சபை மக்களை அப்போஸ்தலர் உபதேசம் விசுவாசிகள் என்ற அழைக்கக் காரணம் இவ்வுலக ஜனங்கள் அறியாத அல்லது அறிந்தும் கீழ்படியாத தேவனுடைய வார்த்தைகள் மீது நாம் விசுவாசமாய் இருப்பதால்தான். உலக படிப்புகள் உலக அறிவுக்கும் சம்பாத்தியத்திற்கும் மட்டுமே உதவுகிறது. மன அமைதிக்கும், நிம்மதிக்கும் இவ்வுலகத்தின் எவ்வளவு பெரிய படிப்பும் உதவாது. ஏனெனில் மனிதன் உண்டான விதம், நோக்கம் எல்லாம் இவ்வுலக படிப்பு தெளிவுபடுத்தவில்லை. வேத புத்தகம் மட்டுமே இதற்கெல்லாம் விடை சொல்லுகிறதாய் இருக்கிறது. ஒரு பொருளோ, கருவியோ அதை பற்றி உண்டாக்கியவருக்கே அதிகமாக தெரிந்திருக்க வாய்ப்புள்ளது. அதுபோலவே நம்மை

***இவ்வுலக தகப்பன் தன் பிள்ளைகளை கவனிப்பதை விட பரலோக தகப்பன் நம்மை சிறப்பாக கவனிக்கின்றார் (மத். 7:11)***

உண்டாக்கிய தேவனின் வார்த்தைகள் அடங்கிய வேதத்தை நேசித்து அதை கைக்கொள்ளும் போது மிகுந்த சமாதானம் கிடைக்கின்றது. இன்றைய தேதியில் சுமார் 2,125 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு யாவரும் சமாதானம் பெறும்படியாக விநியோகிக்கக்கூடிய ஒரே புத்தகம் வேத புத்தகமாகும்.

**III உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் (ஏசா. 26:3)**

ஒரு குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் தங்கள் தேவைகளுக்கு பெற்றோர்களையே நம்பியிருக்கிறது. சபையும் தேவனுடைய குடும்பமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. (எபேசி 3:14). தேவன் நமக்குத் தகப்பனாய் இருக்கிறார். கிறிஸ்து குறிப்பிடுவது போல இவ்வுலக தகப்பன் தன் பிள்ளைகளை கவனிப்பதை விட பரலோக தகப்பன் நம்மை சிறப்பாக கவனிக்கின்றார் (மத். 7:11) தேவன் சர்வவல்லவராக இருப்பதால், அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பதால் அவரை நாம் நம்பும்போது பூரண சமாதானம் நமக்கு கிடைக்க உதவுகிறார். நாம் மனந்திம்பி சிறு பிள்ளைகளைப்போல அவரில் நம்பிக்கையாயிருப்போம் (லூக். 18:7,8).


## IV என் கற்பனைகளை கவனித்தாயானால் உன் சமாதானம் நதியைப் போலும் இருக்கும் (ஏசா 48:18)

மனிதனுடைய கவனத்தை ஈர்க்க இவ்வுலகில் பாவ சந்தோஷங்கள், உலகக் கவலைகள், ஐசுவரியத்தின் மயக்கம், மனுஷர் புகழும் பதவி சுகங்கள்; இன்னும் பல காரியங்கள் உள்ளன. ஆனால், இவைகள் எல்லாம் மனிதனுக்கு உண்மை சமாதானத்தை தரக்கூடாதவைகளாகும். மாறாக மனிதன் தேவனுடையக் கட்டளைகளை கவனித்து நடக்கும் போது நம் எதிர் காலம் பிரகாசமாக இருக்கும் (உபா 8:1) மனிதன் நோயின்றி நீண்ட காலம் வாழ்வதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவு செய்ய ஆயத்தமாயிருக்கிறான். ஆனால், சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது என்றும் தேவபக்தியான வாழ்வே சிறந்தது என்றும் தேவனுடைய வார்த்தை தெளிவுபடுத்துகிறது (1தீமோ 4:8) நம்முடைய வாழ்நாட்கள் நீடித்திருக்கவும், நாம் நன்றாயிருக்கவும் தேவனுடையக் கற்பனைகளை கைக்கொள்ளவேண்டும் என தேவனுடைய மனுஷனாகிய மோசே வலியுறுத்துகிறார். (உபாக 6:1-3) நாம் தேவனுடைய ஆலோசனைகளையும், கட்டளைகளையும் கவனித்து நடந்து நிம்மதியான, அமைதி யான வாழ்வை வாழவே தேவன் விரும்புகிறார். ஆகவேதான் வாரந்தோறும் நாம் சபையாய் கூடி வரும்படியான கற்பனையைப் பெற்று இருக்கின்றோம் (எபி. 10:24,25) நாம் அவருடைய கற்பனைகளை கவனிக்க வாரத்தின் முதல் நாள் மட்டுமல்ல, வாரத்தின் இடைபட்ட நாளில் நடக்கும் வேத வகுப்பு, குடும்ப ஜெபங்கள் மற்றும் சபையார் நடத்தும் வேதாகமக் கருத்தரங்கு கூட்டங்கள், ஏலகிரி முகாம் போன்ற கூட்டங்களில் கூடிவரும் போது நாம் தேவனுடைய கற்பனைகளை கவனிக்கும் வாய்ப்பைப் பெறுகிறோம். அது நிச்சயமாக நம்மை சமாதான்திற்குள்ளாக வழி நடத்த ஏதுவாகும்.

நிறைவாக; எப்போதுமே மனிதன் நிம்மதியையும், அமைதியையும் விரும்புகிற மனம் உடையவனாக இருக்கின்றான். அதை கொடுக்கும் அதிகாரத்தையும், பொறுப்பையும் தேவன் அவருடைய மகன் இயேசுக் கிறிஸ்துவிடம் கொடுத்துள்ளார். (யோவான் 14:27). ஆகவே நாம் ஆண்டவர் இயேசு நமக்கு வெளிப்படுத்தியுள்ள தேவனை தெரிந்து கொண்டு அவருடைய சொந்த ஜனமாக மாறி, அவருடைய வேதத்தை நேசித்து, நம் நம்பிக்கையை அவர் மீது வைத்து, அவருடைய கற்பனைகளை கவனித்து அதின்படி வாழ்ந்து உண்மை சமாதானத்தையும், நிம்மதியையும் பெற்று வாழ்வோம். நம் எல்லா தேவைகளையும் இயேசுவின் நாமத்தில் பிதாவிடம் தெரிவித்து எல்லா புத்திக்கும் மேலான சமாதானத்தை பெற்றுக்கொள்வோம். சமாதானத்தின் தேவன் உங்கள் அனைவரோடுங் கூட இருப்பாராக ஆமென். (ரோமர் 15:33).

# BIBLE MEDITATION

## TV PROGRAM




**கிருபையுள்ள வார்த்தை** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : **சகோ. பிலேமோன் ராஜா**, மதுரை.

| | | | |
|---|---|---|---|
| இமயம் | TV | சனி | காலை 7:45 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | காலை 7:45 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு 10:00 மணி |

**கிறிஸ்துவின் வசனம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : **சகோ. அர்ச்சுணன்**, வத்தலக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| இமயம் | TV | புதன் | காலை 6:30 மணி |





**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |


Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

Licensed to Post without pre payment No: TN / WR / ERD / 03 / WPP / 2009-20111




**( தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம் )**

# திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **தமிழன்** | TV | சனி | காலை | 7:15 | மணி |
| **இமயம்** | TV | ஞாயிறு | காலை | 6:30 | மணி |
| **தமிழன்** | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.